பக்கங்கள்: பத்து
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 14 வள்ளுவர் ஆண்டு 2030 மாசி 15வெள்ளிக்கிழமை (27-02-1998) UTHAYAN– A Lively National Tamil Daily கதிர்: 79

## 2 சடலங்கள் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், பெப். 27

இனம் தெரியாத இரு இளைஞர்களின் சடலங்கள் நேற்று பளைப் பொலீஸாரினால் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டன.

புதன்கிழமை இரவு கிளாலிக் கடற்பரப்பில் இடம்பெற்ற தாக்குதலில் இவர்கள் கொல்லப்பட்டதாகப் பொலீஸாரால் தெரிவிக்கப்பட்டது. (இ-139-15)

# இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண புலிகள் தரப்புடனும் பேச வேண்டும்

### ஜேர்மன் எம். பி. தெரிவிப்பு

கொழும்பு, பெப். 27

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டுமானால் விடுதலைப் புலிகளுடனும் இலங்கை அரசு பேச்சுக்களை நடத்த முயற்சி எடுக்கவேண்டும். போர் நிறுத்தம் இருந்தாலேயே பேச்சுக்களை சுமுகமாக முன்னெடுக்க முடியும்.

இலங்கை வந்துள்ள ஜேர்மன் எம்.பிக்கள்குழுத் தலைவர் வோல்ப்காங் குரோஸ் கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கைக்கும் ஜேர்மனிக்கும் இடையிலான நல்லுறவைப் பலப்படுத்தும் நோக்கத்துடன் 6 எம். பிக்களைக் கொண்ட ஜேர்மன் தூதுக்குழு இலங்கை வந்துள்ளது.

டிரான்ஸ் ஏசியா ஹோட்டலில் நடந்த செய்தியாளர்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# கிளாலித் தளம் மீது புலிகள் தாக்குதல்!

## வடபகுதிக் கடற்பரப்பில் 1 வாரத்தில் 2-வது சம்பவம்

வவுனியா, பெப்ரவரி 27

கடந்த புதன்கிழமை இரவு 11-50 மணியளவில் கிளாலி கடற்படைத் தளத்தின் இறங்குதுறை மீது விடுதலைப் புலிகள் அதிரடித் தாக்குதல் நடத்தியுள்ளனர். இத்தாக்குதல் முறியடிக்கப்பட்டு விட்டதாக அரசுத்தரப்பு அறிவித்துள்ளது.

தாக்குதலின் போது 15 தொடக்கம் 20 வரையிலான விடுதலைப் புலிகளின் படகுகள் பங்கு பற்றின என்றும் — மூன்று கடற்படையினருக்கு இலேசான காயங்கள் ஏற்பட்டதுடன் இரண்டு கண்ணாடி விசைப்படகுகளுக்குச் சேதங்கள் ஏற்பட்டதாகவும் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

வடபகுதிக் கடலில் ஒரு வார காலத்தில் இடம்பெற்ற இரண்டாவது சம்பவம் இதுவாகும்.

கடந்த ஞாயிறு இரவு படையினரின்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## 192 இலங்கையர்களை செனகல் நாடு கடத்தியது

கொழும்பு, பெப். 27

சட்ட விரோதமாக ஐரோப்பிய நாடுகளுக்குள் புக முயன்ற 192 இலங்கையர்கள் செனகல் பொலீஸாரால் கைது செய்யப்பட்டு கடந்த புதன்கிழமை இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டனர்.

படகு ஒன்றின் மூலம் செனகல் கடற்பரப்பில் பயணம் செய்த போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் 131 தமிழர்களும் 11 சிங்களவர்களும் அடங்குவர்.

செனகல் பொலீஸாரால் கைது செய்யப்பட்ட இவர்கள் தனிவிமானம் மூலம் கடந்த புதன்கிழமை கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்துக்குக் கொண்டு வரப்பட்டனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கல்யாண்சிங் அரசு வாக்கெடுப்பில் வெற்றி

புதுடில்லி, பெப். 27

உத்தரப் பிரதேச மாநில சட்டப் பேரவையில் கல்யாண்சிங் அரசுக்கா அல்லது ஜெகதாம்பிகபால் அரசுக்கா? பெரும்பான்மை பலம் இருக்கிறது என்பதை நிரூபிப்பது தொடர்பாக நேற்று நடைபெற்ற வாக்கெடுப்பில் முலலமைச்சரி கல்யாண்சிங் 29 அதிகப்படியான வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார்.

உத்தரப் பிரதேச மாநிலத்தில் பதவியில் இருந்த

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மூன்று பேர் களப்பலி என புலிகள் தரப்பு அறிவிப்பு

வவுனியா பெப். 27

கிளாலிக் கடற்படைத் தளத்தின் இறங்குதுறையில் புதன்கிழமை இரவு நடத்திய தாக்குதலில் தமது தரப்பில் மூவர் களப்பலியானதாக புலிகள் அறிவித்துள்ளனர்.

இந்தத் தாக்குதலில் படையினர் தரப்பில் ஐவர் கொல்லப்பட்டதாகவும்—

தாக்குதலின்போது கிளாலிக் கடலில் ரோந்தில் ஈடுபட்டிருந்த இரு வோட்டர் ஜெட் படகுகள் ஆனையிறவுப் பகுதிக்கு பின்வாங்கிச் சென்றதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இத் தாக்குதல் நடத்தப்பட்டபோது கிளாலிக் கடற்படைத் தளத்தில் எஸ். ரி. எஸ். எனப்படும் கடற்படையின் சிறப்பு கடற்படையினர் நிலைகொண்டிருந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதேசமயம் இத் தாக்குதலின்போது புலிகள் நாகதேவன்துறையில் இருந்து பீரங்கித் தாக்குதலையும் நடத்தியதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

(இ-15-7-9)

### எமது கழகத்தின் பெயரில்

## நிதி, பொருள் சேகரித்தால் தெரியப்படுத்துங்கள்

### புளொட் அமைப்பு அறிக்கை

யாழ்ப்பாணம், பெப். 27

"எமது கழகத்தின் பெயரால் எவராவது பணம், பொருள்கள் சேகரிக்கும் செயல்களில் ஈடுபட்டால் அது தொடர்பாக எமது கவனத்திற்குக் கொண்டு வருமாறு வேண்டுகின்றோம்"

இவ்வாறு புளொட் அமைப்பினர் நேற்று பொதுமக்களுக்குவிடுத்துள்ள அறிக்கை

(10 ஆம் பக்கம் பார்க்க)

# அன்றைய நிலையிலேயே புலிகளுக்கு 10வருட ஆட்சிவழங்க இணங்கினேன்

### ரைம் பேட்டி குறித்து ஜனாதிபதி விளக்கம்

கொழும்பு, பெப். 27

விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்கள் நடத்தும் போதே —

உத்தியோக பூர்வமற்ற முறையில் புலிகளின் கருத்தை அறிந்து கொள்வதற்காக —

வடபகுதி நிர்வாகத்தை பத்து வருடங்களுக்கு விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனிடம் கையளிப்பது தொடர்பான அபிப்பிராயத்தை வெளியிட்டேன்.

இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நேற்று அலரி மாளிகையில் செய்தியாளர்கள் மத்தியில் பேசும்போது தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனிடம் 10 வருட காலத்துக்கு வடபகுதி நிர்வாகத்தை வழங்க தாம்

(10 ஆம் பக்கம் பார்க்க)



போர்க்கோஷத்துக்கு மத்தியில் இனி சமாதான கோஷம் எடுபடாது பாருங்கோ .....!

### கீரிமலையில் இடம்பெற்ற

## சிவராத்திரி வழிபாட்டில் ஆயிரக்கணக்கில்பக்தர்கள்

யாழ்ப்பாணம், பெப். 27

கடந்த எட்டு ஆண்டுகளின் பின்னர் கீரிமலை நகுலேஸ்வரம் ஆலயத்தில் நடைபெற்ற சிவராத்திரி வழிபாடுகளில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

தெல்லிப்பழைச் சந்தியில் வைத்து அனைத்து பக்தர்களும் சோதனை செய்யப்பட்டு அவர்களது அடையாள அட்டைகள் வாங்கப்பட்டன.

அவற்றுக்குப் பதிலாக "பாஸ்" வழங்கப்பட்டு விசேட பஸ்கள் மூலம் பக்தர்கள் ஆலயத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

புதன்கிழமை பிற்பகல் இரண்டு மணிமுதல் தெல்லிப்பழைச் சந்தியில் இருந்து விசேட பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டன.

முன் அனுமதி பெற்ற

(10 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை

அனைத்துலக பெண்கள் தினம் தொடர்பான

## திருத்த அறிவித்தல்

மகளிர் அங்கத்தவர்களுக்கான பேச்சுப் போட்டி **28 - 02 - 1998** சனிக்கிழமை காலை **10.00** மணிக்கும், கோலம் போடுதல் போட்டி பிற்பகல் **2.00** மணிக்கும் நடைபெறும்.

மாவட்டச்செயலாளர்.

(சி/2976)

# காலத்தின் கலங்கரைவிளக்கம்

துணைவேந்தர் பணியில்
**28 — 02 — 1998** இல்
ஓராண்டு நிறைவுகாணும்
எங்கள் பேராசிரியர்

## பொ. பாலசுந்தரம்பிள்ளை

அவர்கள்

சுயசிந்தனையும் அயரா உழைப்பும்
தளரா மனதும் தூர தரிசனமும்
இசைய நிமிர்ந்த துணைவேந்தே!
புனர்வாழ்வு — புது வாழ்வென
ஓராண்டுக்குள்ளேயே எத்துணை மேம்பாடு!
காலத்தின் கலங்கரை விளக்கே
வாழிய நின் வாழ்வும் பணியும்!

ச.க. தனேந்திரன்
யாழ். பல்கலைக்கழகம்

(53691)

# புலமைப் பரிசில் - 1998

16 ஆவது பயிற்சிப் பரீட்சை
(யாழ். மாவட்டம்)
அதிகூடிய புள்ளி பெற்றோர்

1. செல்வன் தளையசிங்கம் அஜந்தன் – 153 புள்ளி (யாழ். இந்து ஆரம்ப பாடசாலை)
2. செல்வன் சிவானந்தன் யோகானந்த் – 150 புள்ளி (யாழ். இந்து ஆரம்ப பாடசாலை)
3. செல்வி உமாகாந்தன் உமையாள் – 149 புள்ளி (யாழ். ஜோன் பொஸ்கோ வித்தி.)
4. செல்வன் அருளானந்தம் சுலக்ஷன் – 147 புள்ளி
5. செல்வி மகேந்திரம் சுகன்ஜா – 145 புள்ளி (யாழ். கொக்குவில் இந்து ஆர. பாட.)

மேலதிகமாக பரிசுபெறும் சுட்டெண்கள்:
**366, 11, 49, 173, 20**

அடுத்த பரீட்சை: **01 - 03 - 1993**

**BOND** யாழ். நகர் (53683)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## வல்லிபுரம் சிங்கராசா

தோற்றம்: **22 — 02 — 1925**
மறைவு: **10 — 03 — 1997**
திதி: 28 - 02 - 1998

கண்ணீர்க் கடலில் எம்மையெல்லாம் தவிக்க விட்டு
எமைப் பிரிந்து சென்றீரே ஐயா!
ஓராண்டு சென்றதையா உமைப்பிரிந்து ஆறாது எம் துயரம்
உம்பிரிவு நிஜமல்ல; கனவு போல் உள்ளதையா
நீரில்லா உலகில் எமக்கேது நிம்மதி
பாசமுள்ள ஐயாவே எம்மிடம் இன்னொரு தடவை திரும்பி வருவீரோ?
ஆண்டொன்று சென்றாலும் உம்மைமறவோம் நாம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்
அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

ஸ்ரான்லி கல்லூரி லேன்,
கச்சேரியடி,
யாழ்ப்பாணம்.

(சி/2977)

சித்திவிநாயகர்
கல்வி நிலையம்
மல்லாகம்.

**2000 A/L**

பிரிவுக்கான
கலை, வர்த்தகப்
பிரிவுகள்
நடைபெறுகின்றன.

**கணக்கீடு**
திரு. D. SAM
வெள்ளி
27–02–98
3.30 மணி

(53690)

# BEACON

வதிரி

**A/L 98**

வினா விடை வகுப்பு

**CHEMISTRY**

திரு. மகாதேவா
சனி – ஞாயிறு 2.00 P.M.
ஆரம்பம்:
**01 — 03 — 1998**

(53686)

# விக்னா

கல்வி நிறுவனம்
பொருளியல்
திரு. விக்கி

**A/L 98**

பணமும் வங்கியும்
28 - 02 - 98
**10 A. M.**

(53678)

# S.R. சினிமா

வெண் திரையில்
கரவெட்டி
அம்பம் வைத்தியசாலைக்கு
அண்மையில்.

இன்று முதல்
ரேவதி
நடித்த

**பயம்**

காட்சிகள்: **10-30, 2-30**
(பழைய நேரம்)

(சி/2959)

நெல்லியடி

# மஹாத்மா

வெண் திரையில்
இன்று 27- 02 - 98 முதல்
முரளி — சுபலட்சுமி
நடித்த
**தினந்தோறும்**
காட்சிகள்: **10-30, 2-30**
( பழைய நேரம் )

(சி/2756)

# லிபேட்டி சினிமா

அச்சுவேலி.

35 அடி அகலத் திரையில்

சனிக்கிழமை 28-2-98 வரை
**தினந்தோறும்**
01 - 03 - 98 ஞாயிறு
தொடக்கம்
பார்த்திபன் — தேவயாணி
மணிவண்ணன் நடித்த
**சொர்ணமுகி**
(புதிய வெளியீடு)
பழைய நேரம்
**10-30, 2-30**

(53059)

# பிறைவேற் மெடி கிளினிக்

ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
[ சந்தை முன்பாக ]

மட்டுப்படுத்தப்பட்டு இயங்கிய பின்வரும் வைத்திய சேவைகள் விரிவுபடுத்தப்பட்டு முழுநேர சேவையாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**சேவைகள்:**

- ★ வெளிநோயாளர் பிரிவு
- ★ வைத்திய நிபுணரின் ஆலோசனை
- ★ மகப்பேற்றுக் கிளினிக்
- ★ சிறுநீர்ப் பரிசோதனை
- ★ இரத்தப் பரிசோதனை
- ★ மருந்தகம்

அனுபவம் வாய்ந்த [ M B B S ] வைத்திய கலாநிதிகளின் சேவை எம்மால் வழங்கப்படுகிறது.

- நிர்வாகம்

(53682)

# மரண அறிவித்தல்கள்

## இராசையா நடராசா

(சவுத்லன் மோட்டோர் பிரபல கார் தரகர்)

கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட இ. நடராசா 26-2-98 இல் கொழும்பில் காலமானார்.

இவர் ஞானமலரின் அன்புக் கணவரும், நிசாந்தினி, விஜயரூபன், முரளிநாத் ஆகியோரின் அன்புத்தந்தையும், தையல்நாயகி, கோபாலபிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும், கீத்தாவின்பெரியப்பாவும், கந்தையாவின் மைத்துனரும், விமலநாதன், ரங்கநாதன் (ஜேர்மனி), விஜயநாதன், செந்தில்நாதன் (இந்தியா), நாகறஞ்சினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 27-2-98 இன்று கொழும்பில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. கோபாலபிள்ளை
(சகோதரன்)

(53692)

## முத்து சபாரத்தினம்

திருநெல்வேலி நாவலடி ஒழுங்கையில் வசித்த முத்து சபாரத்தினம் அவர்கள் 26–02–98 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற பஞ்சவர்ணத்தின் அன்புக் கணவரும், கனகரத்தினம் (ஜேர்மனி), செல்வரத்தினம் (ப.நோ. கூ. சங்கம், நல்லூர்), இராசரத்தினம், யோகரத்தினம் (புதுக்குடியிருப்பு), இந்திராணி, தவமணிதேவி (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், புவனேஸ்வரி, சுலோசனாதேவி, செல்வரஞ்சிதம், ஓம்சிவசக்தி, கணேசபாலன், சந்திரகாந்தன ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (27–2–98) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் திருநெல்வேலி இந்து மயானத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

தகவல்:
தா. கணேசபாலன்
(மருமகன்)

நாவலடி ஒழுங்கை,
திருநெல்வேலி.

(53694)

## நாகனாதபிள்ளை பாலசிங்கம் B A.

(சட்டத்தரணி)

(ஓய்வு பெற்ற உதவி சட்ட வரைஞர், சட்ட வரைஞர் திணைக்களம்)

புங்குடுதீவு 7 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 1 ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நாகனாதபிள்ளை பாலசிங்கம் கொழும்பில் 25 – 02 - 1998 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகனாதபிள்ளை விசாலாட்சி ஆகியோரின் சிரேஷ்ட மகனும் காலஞ்சென்ற வினாசித்தம்பி இராசம்மா ஆகியோரின் மருமகனும் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், பிறேமதாஸ் (சுவிஸ்), விமலதாஸ் (மாணவன், கொழும்பு ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்), நிமலதாஸ் (மாணவன், பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி), பாமதி (லண்டன்) ஆகியோரின் அருமைத் தந்தையும், சுந்தரமூர்த்தியின் (லண்டன்) மாமனாரும், நாகம்மா, தங்கலெட்சுமி, சிவலிங்கம் (வர்த்தகர் கொழும்பு), சேனாதிராசா (பொறியியலாளர், சிமெந்துக் கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை), ஜெகதீசன் (சிமெந்து கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை), இரத்தினபூபதி (கண்டி), பஞ்சலிங்கம் (அதிபர், யா/புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம்) ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற இந்திரா மற்றும் குகன் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 01 - 03 - 1998 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3. 00 மணிக்கு கொழும்பில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நா. ஜெகதீசன்
(சகோதரர்)

7 ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.

(53695)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காங்கிரஸ், ஐக்கிய முன்னணி தேர்தலுக்குப்பின் இணையும்

## மூப்பனார் நம்பிக்கை

சென்னை, பெப். 27

பாரதிய ஜனதா ஆட்சி வருவதைத் தடுக்க, தேர்தலுக்குப் பின்னர், ஐக்கிய முன்னணியும் காங்கிரஸும் ஓரணியில் நிற்கும் என்று த.மா.கா. தலைவர் ஜி. கே. மூப்பனார் நம்பிக்கை தெரிவித்தார்.

''1996 இலும் அப்படித் தானே நடந்தது. பா.ஜ.க. ஆட்சி அமைக்கக் கூடாது என்பதற்காகத்தானே காங்கிரஸும் ஐக்கிய முன்னணியும் சென்ற முறை ஓரணியில் நின்றன'' என்று அவர் தெரிவித்தார்.

ஐக்கிய முன்னணிக்குத் தனிப்பெரும்பான்மை கிடைக்காது என்பதை ஏற்க மாட்டேன். எப்படி அவ்வாறு சொல்ல முடியும்? காங்கிரஸ் ஆட்சி அமைக்குமா என்பது பற்றியும் இப்போது சொல்வதற்கில்லை.

இத்தேர்தலில் தமிழ்நாட்டில் 10தொகுதிகளில் தி.மு.க



த.மா.கா கூட்டணி வெற்றி பெறுவதில் கடும் போட்டி உள்ளது. அத்தொகுதிகளில் ஒன்றிரண்டைத் தவிர மற்றவற்றில் குறைந்த வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற வாய்ப்புள்ளது.

ஜெயலலிதாவுக்குக் கூடிய கூட்டத்தினர் அக்கட்சிக்கு வாக்களிப்பார்கள் என்பதற்கில்லை. ஊழல் மட்டுமே இத்தேர்தலின் முக்கிய பிரச்சினையாக இல்லை. அ.தி.முகவை அதன் ஊழலுக்காக மக்கள் ஒரு முறை தண்டித்து விட்டார்கள். இந்தமுறை அதேபோல் தண்டிக்க விரும்பமாட்டார்கள். ஆனால் அதற்காக ஜெயலலிதா மீண்டும் ஆட்சிக்கு வருவதை மக்கள் விரும்பவில்லை என்றார் மூப்பனார்.

இம்முறை 'கிங் மேக்கராக'

**இந்தியச் செய்திகள்**

இருப்பீர்களா, அல்லது கிங் ஆக இருக்க விரும்புவீர்களா என்ற கேள்விக்கு ''கட்சியின் சாதாரண தொண்டன் நான்; அதற்குமேல் ஒன்றுமில்லை'' என்றார் மூப்பனார். (ஐ-10)

# 131 இடங்களில் நாளை 3 ஆவது கட்ட வாக்களிப்பு!

புதுடில்லி, பெப். 27

இந்தியாவின் பொதுத் தேர்தலின் மூன்றாவது கட்ட வாக்களிப்பு நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

16 மாநிலங்களில் மொத்தம் 131 மக்களவைத் தொகுதிகளில் நாளை வாக்குப் பதிவு நடைபெறவுள்ளது. மொத்தம் 945 வேட்பாளர்களின் அரசியல் எதிர்காலத்தை சுமார் 14 கோடி 55 லட்சம் வாக்காளர்கள் நாளை முடிவு செய்வார்கள்.

மூன்றாம் கட்டத் தேர்தலுக்கான அரசியல் கட்சிகளின் பிரசார நடவடிக்கைகள் யாவும் நேற்று மாலை 5 மணியுடன் முடிவடைந்தன.

நாளைய வாக்குப் பதிவு அமைதியாக நடைபெற எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருப்பதாக தேர்தல் ஆணையகம் தெரிவித்தது.

பொதுத்தேர்தல் முடிவுகள் அடுத்த வார முற்பகுதியில் வெளிவரத் தொடங்கும்.

வாக்குகளை எண்ணும் பணி மார்ச் 2 ஆம் திகதி ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. நாளைய மூன்றாம் கட்ட வாக்களிப்புடன் மொத்தமாகவுள்ள 543 மக்களவைத் தொகுதிகளில் 537 இல் வாக்குப் பணி முடிந்துவிடும். எஞ்சிய ஆறு தொகுதிகளுக்கான வாக்களிப்பு மார்ச் மாதம் 7 ஆம் 30 ஆம் திகதிகளிலும், ஜூன் 21 ஆம் திகதியும் வாக்குப் பதிவு நடைபெறும். (ஐ)

## குஜ்ரால் மறுக்கிறார்

புதுடில்லி, பெப். 27

உத்தரப்பிரதேச ஆளுநர் றொமேஸ் பண்டாரி தாமாக முன்வந்து தமது பதவியை ராஜினாமாச் செய்ய வேண்டும் என்று தாம் யோசனை கூறியதாக வெளிவந்த செய்தியைப் பிரதமர் ஐ.கே. குஜ்ரால் மறுத்திருக்கிறார்.

உத்தரப்பிரதேச ஆளுநர் பண்டாரிக்கு இத்தகைய யோசனை எதையும் தாம் தெரிவிக்கவே இல்லை என்று குஜ்ரால் கூறினார்.

# சென்னை நகரில் வெடிகுண்டு மீட்பு!

சென்னை, பெப். 27

சென்னை நகரில் நேற்று முன்தினம் காலை எட்டு கிலோ நிறையுடைய வெடிகுண்டு ஒன்றை பொலீஸார் மீட்டனர்.

அண்ணாசாலையில் சாப்பாட்டுப் பெட்டி (ரிபன் பொக்ஸ்) ஒன்றில் இக்குண்டு வைக்கப்பட்டிருந்தது. பெட்டியைத் திறந்ததும் வெடிக்கக் கூடியதாகக் குண்டு பொருத்தப்பட்டிருந்ததாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

பஸ்ஸுக்காகக் காத்திருந்த ஒருவர் பை ஒன்றில் இதனைக் கண்டதும் பொலீஸாருக்குத் தகவல் கொடுத்தார்.

குண்டை பொலீஸார் மீட்டு செயலிழக்கச் செய்தனர். இதே வேளை திரையரங்கு ஒன்றில் குண்டு வைக்கப்பட்டிருப்பதாக தொலைபேசி மூலம் கிடைத்த அநாமதேயத் தகவலைத் தொடர்ந்து பொலீஸார் அந்தத் திரையரங்கில் தேடுதல் நடத்தினர். வெடிகுண்டு எதுவும் கண்டு பிடிக்கப்படவில்லை.

வெடிகுண்டுகள் பற்றிய அநாமதேயத் தகவல்களினால் கடந்த சில நாள்களாக தமிழகப் பொலீஸார் அலைக்கழிக்கப்பட்டு வருகின்றனர். (ஐ)

# நிலத்துக்கு அடியில் பெற்றோல் குண்டு

கோவை, பெப். 27

தொடர் குண்டு வெடிப்புக்களால் பதற்றமடைந்திருக்கும் கோவையில் கரும்புக்கடை என்னும் இடத்தில் திடீர்ச் சோதனை நடத்திய பொலீஸார் நிலத்துக்கு அடியில் புதைத்து வைக்கப்பட்டிருந்த 75 பெற்றோல் குண்டுகளை மீட்டுள்ளனர்.

பள்ளிவாசல் ஒன்றின் பின்புறமாக அவை புதைக்கப்பட்டிருந்தன. பிறண்டி போத்தல்களில் பெற்றோல் நிரப்பப்பட்டு இந்தக் குண்டுகள் தயாரிக்கப்பட்டிருந்ததாக துணைபொலீஸ் கண்காணிப்பாளர் குணசேகரன் தெரிவித்தார். (ஐ)

'தொன்மை மறவேல்'

யாழ்ப்பாணம்

ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச்சங்கம்

**பரிசளிப்பு விழா**

காலம்: 1998 – 03 – 07 ஆம் திகதி
சனிக்கிழமை முற்பகல் 9. 30 மணி

இடம்: யா/யாழ்ப்பாணம்
இந்து மகளிர் கல்லூரி.

தலைவர்: வித்துவான் க. சொக்கலிங்கம் M. A

முதன்மை விருந்தினர்
பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
(துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்)

சிறப்பு விருந்தினர்:
திரு. சி. சிவராசா
(கல்விப்பணிப்பாளர், யாழ் வலயம்-2)

அனைவரும் வருக! வருக!

ம. ந.கடம்பேஸ்வரன்
செயலாளர்.

யாழ்ப்பாணம்.
(53676)

## ராஜீவ் கொலைச் சதி விசாரணையை முடிக்க

# நீதிபதி ஜெயின் குழுவுக்கு மேலும் இரு மாத அவகாசம்

புதுடில்லி, பெப். 27

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் படுகொலைக்குப் பின்னணியில் உள்ள சதி குறித்து விசாரணை நடத்தும் ஜெயின் கமிஷனுக்கு மேலும் இருமாதங்கள் நீடிப்பு (ஏப்ரல் 30 வரை) அளிக்க மத்திய அரசு உத்தேசித்துள்ளது. அடுத்த ஓரிரு தினங்களில் இதற்கான அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நீதிபதி மிலாப் சந்த் ஜெயின் தலைமையிலான ஒரு நபர் விசாரணைக் கமிஷனின் நீடிக்கப்பட்ட பதவிக்காலம் இந்த மாதம் 28 ஆம் தேதியுடன் முடிவடைகிறது. ஆறு ஆண்டுகள் முடிவடைந்த நிலையில் கடந்த ஆண்டு ஆகஸ்ட் 28 ஆம் தேதி இடைக்கால அறிக்கையை அரசிடம் கமிஷன் அளித்தது.

விசாரணைக் கமிஷனின் பதவிக்காலம் மேலும் நீடிக்கப்படும் வாய்ப்பு இல்லை என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், பெப்ரவரி 28 ஆம் தேதிக்குள் இறுதி அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு கமிஷன் அப்போது கேட்டுக் கொள்ளப்பட்டது.

இதற்கிடையில், கமிஷனின் இடைக்கால அறிக்கை பத்திரிகைகளில் வெளியாகி பெரும் சர்ச்சை ஏற்பட்டது. கமிஷனே பத்திரிகைகளுக்கு அறிக்கையை 'லீக்' செய்திருக்கலாம் என்று உள்துறை அமைச்சர் இந்திரஜித் குப்தா நாடாளுமன்றத்திலேயே குற்றஞ்சாட்டினார்.

இதைத் தொடர்ந்து அறிக்கை வெளியானது எப்படி என்பது குறித்து விசாரணை நடத்த மத்திய புலனாய்வுத்துறைக்கு (சிபிஐ) உத்தரவிடப்பட்டது.

ஜெயின் கமிஷன் அறிக்கையைத் தொடர்ந்து ஐக்கிய முன்னணி அரசுக்கு அளித்த ஆதரவை காங்கிரஸ் கட்சி விலக்கிக் கொண்டது; மக்களவை கலைக்கப்பட்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வாக்குச்சாவடிக்குள் குரங்குகள் அட்டகாசம்

கரூர், பெப். 27

கரூர் மக்களவைத் தொகுதியில் உள்ள ஐயர் மலை ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளி வாக்குச் சாவடியில் குரங்குகள் அடிக்கடி நுழைந்து அட்டகாசம் செய்தன.

அந்த வாக்குச்சாவடியில் பாதுகாப்புப் பணியில் இருந்த காவலர்கள் அக்குரங்குகளைஅவ்வப்போது விரட்டியடித் இருந்தனர்.

இருப்பினும் அவ்வாக்குச் சாவடியில் தேர்தல் பணியில் ஈடுபட்டிருந்த அதிகாரிகளும் வாக்களிப்பதற்காக வரிசையில் நின்றிருந்த வாக்காளர்களும் ஒருவித அச்சத்துடன் காணப்பட்டனர்.

ஐயர் மலைப்பகுதியில் குரங்குகளின் நடமாட்டம் அதிகம் இருப்பதாகவும், கடந்த சனிக்கிழமை இரவு ஒரு சில குரங்குகள் வாக்குச்சாவடிக்குள் நுழைந்து அங்கிருந்த இரண்டு ரியூப் லைட்டுகளை உடைத்து விட்டதாகவும் தேர்தல் பணியில் ஈடுபட்டிருந்த அலுவலர்கள் தெரிவித்தனர். (ஐ)

## பலத்த பாதுகாப்புடன்

# கோவை தொகுதிக்கும் நாளை வாக்களிப்பு!

சென்னை, பெப். 27

தொடர் குண்டு வெடிப்புக்களினால் பாதிக்கப்பட்ட கோவையில் நாளை வாக்களிப்பு நடைபெறவுள்ளது.

நாளை நடைபெறும் மூன்றாவது இறுதிக்கட்ட வாக்களிப்பில் தமிழகத்தில் கோவைத் தொகுதியில் மட்டுமே வாக்குப் பதிவு இடம்பெறவுள்ளதால் சகல அரசியல் கட்சிகளின் கவனமும் அத்தொகுதி மீதே உள்ளது. இறுதிநேர பிரசார நடவடிக்கைகள் கடந்த இரு நாள்களாக இங்கு சூடு பிடித்துள்ளன.

தமிழக முதல்வர் கருணாநிதி நேற்று முன்தினம் கோவைக்கு விஜயம் செய்தார். பலத்த பாதுகாப்புடன் நடந்த பிரசாரக் கூட்டம் ஒன்றில் அவர் உரையாற்றினார்.

தி. மு. க, பாரதீய ஜனதா, காங்கிரஸ், அ. தி. மு.க ஆகிய கட்சிகள் கோவைத் தொகுதியில் போட்டியிடுகின்றன.

குண்டுவெடிப்புச் சம்பவங்களால் பாதுகாப்பு கவலை எழுந்ததை அடுத்து திருமதி சோனியா காந்தியின் கோவை விஜயம் ரத்துச் செய்யப்பட்டது. பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர்களும் நேற்றுவரை அங்கு செல்லவில்லை.

நாளைய வாக்களிப்பு அமைதியான முறையில் நடைபெற எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. பாதுகாப்பு ஏற்பாடு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழல்கள், முறைகேடுகளை எழுத்தில் தமக்குத் தர ஜனாதிபதி உத்தரவு

கொழும்பு, பெப். 27 அமைச்சுகள், திணைக்களங்களில் இடம்பெறும் ஊழல்கள் மற்றும் முறைகேடுகள் தொடர்பான தகவல்களை எழுத்து மூலம் சமர்ப்பிக்குமாறு தன்னைச் சந்தித்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

மார்ச் மாதம் 7 ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தில் அரச திணைக்களங்கள் மற்றும் அமைச்சுகளில் இடம்பெறும் ஊழல்கள், மற்றும் முறைகேடுகளை ஒழிப்பதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆராயப்படும் எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலைகளை முடிந்தளவு குறைப்பதற்கு ஆலோசனைகளையும் திட்டங்களையும் உடனடியாகச் சமர்ப்பிக்கும் படியும் ஜனாதிபதி நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பணித்துள்ளார்.

மக்கள் எதிர்நோக்கும் அதிகரித்த வாழ்க்கைச் செலவுகளைக் குறைப்பதற்கான திட்டங்களைத் தயாரித்து அமுல்படுத்துவதற்காக அரசாங்க கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் அவசர கூட்டத்தைக் கூட்ட தான் முடிவெடுத்ததாகத் தெரிவித்த ஜனாதிபதி, அரசாங்க திணைக்களங்களிலும் அமைச்சுகளிலும் இடம்பெறும் ஊழல்கள், முறைகேடுகள் தொடர்பாக ஒவ்வொரு அமைச்சு மட்டத்திலும் நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

அடுத்த மாதம் 7 ஆம் திகதி நடைபெறவுள்ள இந்தச் சந்திப்பில் அமைச்சு அதிகாரிகளும் கலந்து கொள்ளும் விதத்தில் அவர்களுக்கு அவசர அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது. அன்றைய கூட்டத்தில் வேலையற்றோர் பிரச்சினையும் ஆராயப்படும் என்றும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

(ஐ-10)


## பொருளியற் கல்லூரி

நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

**A/L 97, 98**

(புதிய, பழைய பாடத்திட்டம்)

PAPER CLASS

நடைபெறுகின்றன.

பொருளியல் – திரு. வரதராஜன்
வர்த்தகம் – திரு. முரளி
கணக்கீடு – திரு. வன்னியசிங்கம், திரு. சதீஸ்
புள்ளிவிவரவியல் – திரு. திரிகரன், திரு. அம்பி
அளவையியல் – திரு. R. P. சர்மா
தமிழ் – திருமதி மீரா
இந்துநாகரிகம், இந்துசமயம் – திரு. ஜோதீஸ்வரன்
நாடக, அரங்கியல் – திரு. கந்தவேள்
புவியியல் – திரு. இக்னேசியஸ்

Note: பிரிவு I சனி, ஞாயிறு மட்டும்.
பிரிவு II திங்கள் முதல் வெள்ளி வரை.

விரும்பிய பிரிவுகளில் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

(49970)


## ஓராண்டு நினைவஞ்சலி



திருமதி
**யோகராணி சிவராசா**

(மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்டவர்)

தாயின் மடியில்: **30–04–1960**
இறைவன் அடியில்: **09–03–1997**

மாதினியாய் இளம் மலரணையாய் பெரும்
சீருடையாய் புகழ் நிறைவுடையாய் எம்
பாசமுளாய் பெரும் அன்புடையாய் உயர்
நேசமுளாய் பெரும் யோகரைப்போல் எமை
ஏங்கவைத்தாய் யோகராணி நீ இங்கிருந்து
ஏகியதெங்கு நீ ஆண்டுகள் போயினும்
சீவியம் முழுவதும் உன் நினைவு அகன்றிட
மாட்டுதம்மா மலர் தூவியர்ச்சிக்கின்றோம்.

பிரிவால் வாடும்:
கணவன், பெற்றோர், சகோதரர்கள்,
மைத்துனர், மைத்துனிகள்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

(52677)


## பொருளியற் கல்லூரி

யாழ்ப்பாணம்.

**A/L 99**

★ ஒப்படைக்கணக்கு
★ கட்டுப்பாட்டுக் கணக்கு
வெள்ளி – 3–30
திரு. வன்னியசிங்கம்
சனி – ஞாயிறு
வர்த்தகம்
திரு. முரளி
★ பணம்
★ காப்புறுதி
புள்ளி விவரவியல்
திரு. திரிகரன்
★ நிகழ்தகவு

(49971)



## ஈசன்

கல்வி நிலையம்
கே. கே. எஸ், வீதி,
கோண்டாவில்.

கணக்கீடு
பிரத்தியேக வகுப்புகள்
**A/L 98**
கம்பனி
ஆரம்பம்: 27 - 02 - 98
4–00 P. M.
**A/L 99**
ஒப்படைக்கணக்கு
ஆரம்பம்: 01 - 03 - 98
9–00 A. M.
திரு. [illegible]

(53674)


# உதவி வைத்தியர் சேவை ஒழிப்பினால் பாதிப்பு நமக்கே!

இலங்கையில் உதவி வைத்திய அதிகாரிகள், பதிவு பெற்ற மருத்துவ அதிகாரிகள் பதவிக்கு புதியவர்கள் சேர்க்கப்படவும் மாட்டார்கள்; இனி அப்படி ஒரு பதவியும் இருக்காது என்று அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் தற்போது மருத்துவ மாணிப்பட்டம் பெற்ற வைத்தியர்களுக்கு மிகுந்த பற்றாக்குறைகள் நிலவுவது யாவரும் அறிந்ததே. இத்தகைய பற்றாக்குறைகள் நிலவுகின்ற போதிலும் வைத்தியர்கள் இங்கு வந்து சேவை செய்ய விரும்பாமல் பின்னடிப்பதாலும் எமது மக்கள் ஓரளவுக்கேனும் சிகிச்சை பெற்றுக் குணமடைய சேவையாற்றி வருபவர்கள் உதவி வைத்தியர்களும், பதிவு செய்யப்பட்ட வைத்தியர்களுமே ஆவர்.

இவர்களின் சேவை இலங்கையின் ஏனைய பகுதிகளுக்கு தேவையில்லாமல் இருக்கலாம். ஏனெனில் அங்கே வைத்தியர்களை மேலதிகமாக வைத்துக் கொண்டு அவர்களை என்ன செய்வதென்று தெரியாது சுகாதார அமைச்சு அதிகாரிகள் திண்டாடுகிறார்கள். ஆனால் எமது வடக்கு–கிழக்கு மாகாணத்தில் வைத்தியர்களுக்கு மிகப் பெரிய அளவில் பற்றாக்குறை நிலவுகிறது. இந்நிலையில் இனிவரும் காலங்களில் வைத்தியர்களே இல்லாமல் போனாலும் வைத்திய சேவையைத் தொடர்ந்து நடத்துவதற்குப் பதிவு செய்யப்பட்ட வைத்தியர்களும், உதவி வைத்தியர்களும் மேன்மேலும் தேவைப்படுவார்கள். இதற்காகவடக்கு–கிழக்கு மாகாணத்திலாயினும் உதவி வைத்திய அதிகாரிகளின் சேவையைத் தொடர்ந்தும் நடத்த வேண்டிய தேவையுள்ளது. அதற்கென புதியவர்களையும் தேர்ந்தெடுத்து அவர்களுக்குப் பயிற்சி வழங்கி உதவி வைத்தியர் சேவையைத் தொடர்ந்து நடத்த வேண்டிய எமது பகுதி மக்களுக்கு அவசியமான முன்னேற்பாடான தேவையுமாகும்.

[illegible]

யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவரையில் போதனா வைத்தியசாலையில் மட்டுமே மருத்துவமாணிப் பட்டதாரிகள் கடமையாற்றுகின்றனர். ஏனைய ஆதார வைத்தியசாலைகள், மாவட்ட வைத்தியசாலைகள், சுற்றயல்கூறு, கிராமிய வைத்தியசாலை, மகப்பேற்று நிலையமும் மருந்தகமும், மத்திய மருந்தகம் போன்றவற்றில் உதவி பதிவு செய்யப்பட்ட வைத்தியர்களே குறைந்த ஊதியத்தில், அடிப்படை வசதிகளே இல்லாத நிலையிலும் தமது சேவையை மிகவும் பாராட்டத்தக்க வழியில் செவ்வனே செய்து வருகிறார்கள்.

போதனா வைத்தியசாலைக்கோ அல்லது ஆதார வைத்தியசாலைக்கோ கடமையாற்ற வரமறுத்து வரும் வைத்தியர்கள் இவ்வாறான சிறிய வைத்தியசாலைகளில், அடிப்படை வசதிகள், ஆளணிகள் இவ்வாறு கடமையாற்றி வருவார்களா என்பது கேள்விக்குரியதே. ஆனால் சிறிய வைத்தியசாலைக்கும் நியமிக்கும் நோக்குடனேயே, அமைச்சரவை உதவி/பதவி செய்யப்பட்ட வைத்தியர்களின் சேவையை நிறுத்த முடிவு செய்துள்ளது.

மேற்கூறப்பட்ட முடிவை கவனத்தில் எடுத்து அக்கறையுடன் ஆராய வேண்டியது எமது பகுதி மக்களினதும் அரசியல் தலைவர்களினதும் கடமையாகும். அமைச்சரவையில் மேற்கூறப்பட்ட முடிவு எடுக்கப்பட்டதால் பாதிக்கப்பட உள்ளவர்கள் எமது பகுதி மக்களே என்பதால் நாமே இதுவிடயத்தில் முன்னின்று உழைக்க வேண்டும்.

எமது வடக்கு – கிழக்கு பகுதியிலாவது உதவி/பதிவு செய்த மருத்துவர்கள் சேவை தொடரவும் புதிதாக தேர்ந்தெடுத்து புதியவர்களை இச்சேவையில் பயிற்சி வழங்கவும் வேண்டியுள்ளது. தற்போது ''சேவை நீடிப்பில்'' கடமையாற்றும் உதவி/பதிவு செய்த மருத்துவர்களின் காலம் முடியும் போது திடீரென எமது பகுதியில் பெரும் வெற்றிடம் உருவாகும். அப்போது மக்களின் மருத்துவ தேவையே சீர்குலைந்து போகும்.

வடக்கு–கிழக்கில் உதவி வைத்திய அதிகாரிகளின் சேவை இன்னும் ஐந்து அல்லது பத்து வருடங்களுக்கு நடைமுறையில் இருக்கத் தக்கதாக மாகாண சபை மட்டத்திலாவது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இது குறித்து இப்போது சிந்திக்காமல் இருப்போமாயின் எங்கள் பகுதி வைத்திய சேவை குன்றி மக்கள் அதனாலேயே இறக்கவும் நேரிடலாம்.

அ. பொ. ரட்ணகுமார்

சுண்டுக்குளி

## தையற் பயிற்சி

நல்லூர், பெப். 27 நல்லூர் முருகன் சனசமூக நிலையம் தையல், துணிக்கு சாயமிடல், சித்திரம் போன்ற பயிற்சி நெறிகளை இலவசமாக நடத்தமுன்வந்துள்ளது.

குறிப்பிட்ட பயிற்சி நெறிகளில் கலந்து கொண்டு பயிற்சி பெறவிரும்புபவர்கள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பி. ப. 5 மணிக்கு முன்னதாக மேற்படி சனசமூக நிலையத்தில் தமது பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ–103)

## அன்னமார் ஈஸ்வரர் ஆலயம்

திருப்பணி நிதிக்காக நடத்தப்பட்ட

**அதிர்ஷ்டலாப சீட்டு முடிவு**

1 ஆவது இலக்கம் — **1460**
2 ஆவது இலக்கம் — **399**
3 ஆவது இலக்கம் — **1267**

ஆறுதற் பரிசிற்குரிய இலக்கங்கள்

1] **300** 2] **1839**
3] **756** 4] **1641**
5] **2064**

செயலாளர்,
பரிபாலகர்சபை.

ஆத்திசூடி வீதி,
யாழ்ப்பாணம்.

[53673]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'பீஸ் கோப்ஸ்' தொண்டு நிறுவனம் இலங்கையிலிருந்து வெளியேறும்

## பாதுகாப்புநிலையேகாரணம்

கொழும்பு, பெப். 27

இலங்கையில் கடந்த 35வருடங்களாக சமூக அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் சர்வதேச தொண்டர் நிறுவனமான 'பீஸ் கோப்ஸ்' (Peace Corps) பிரதிநிதிகளை நாடு திரும்புமாறு அமெரிக்காவில் உள்ள இந்த நிறுவனத்தின் தலைமையகம் அறிவித்துள்ளது.

இந்த நிறுவனம் முன்னாள் அமெரிக்கஜனாதிபதி காலஞ்சென்ற ஜோன் எப். கென்னடியினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

1962 முதல் இலங்கையில் நகர கிராம சமூக அபிவிருத்தி, ஆங்கில கல்வி நடவடிக்கைகளில் இந்த நிறுவனம் சேவையாற்றி வருகின்றது.

இலங்கையின் தற்போதைய பாதுகாப்பு நிலைமையைக் கருத்திற்கொண்டு தற்போது சேவையிலுள்ள 25 உத்தியோகத்தர்களையும், 48 தொண்டர்களையும் எதிர்வரும் ஏப்ரல் 19 ஆம் திகதிக்கு முன்பு அமெரிக்கா திரும்புமாறு தலைமையகம் அறிவித்துள்ளது. (இ–21)

## மகப்பேற்று சிகிச்சை நிபுணர்

யாழ்ப்பாணம், பெப். 27

யாழ்·பல்கலைக்கழக மருத்துவபீட மகப்பேற்று விரிவுரையாளரும் குழந்தை மகப்பேற்று சிகிச்சை நிபுணருமான டாக்டர் சிவசூரியர் நேற்று முன்தினம் தொடக்கம் யாழ். போதனா வைத்தியசாலையின் மகப்பேற்றுப்பிரிவில் தமது சேவையை ஆரம்பித்துள்ளார். (இ–139-15)

## மட்டு. நகரில் தேடுதல்

வவுனியா, பெப். 27

மட்டக்களப்பு நகரப்பகுதியை அண்டிய ஊரணி, இருதயபுரம் ஆகிய பகுதிகளை கடந்தசெவ்வாயன்று காலை 5.30 முதல் சுற்றிவளைத்த இராணுவத்தினரும், பொலீஸாரும் அப்பகுதிகளில் கடுமையான சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

பிற்பகல் 4.30 மணிவரை நீடித்த இந்த சுற்றிவளைப்பின்போது 2 இளைஞர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ–7-164)

## ரூ.5,000 கிடைக்கவில்லை

அரியாலை பெப். 27

அரியாலை மத்தி (ஜே. 96) கிராம சேவையாளர் பிரிவில் இன்னும் 225 குடும்பங்களுக்கு இடம்பெயர்ந்தோருக்கான மீளக் குடியமர்வுக் கொடுப்பனவான ஐயாயிரம் ரூபா இன்னும் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஒரு வருட காலமாகியும் இக் கொடுப்பனவுக்கு விண்ணப்பித்தவர்கள் இக் கொடுப்பனவை பெறுவதற்கு நல்லூர் பிரதேச செயலகம் மற்றும் கிராம சேவையாளர் அலுவலகத்துக்கு அலைந்து திரிகின்றனர். (ஐ–17)

## கந்தபுராண படனம்

யாழ்ப்பாணம், பெப். 27

திருநெல்வேலி திருவருள் மிகு ஸ்ரீ தலங்காவல் பிள்ளையார் கோயிலில் கடந்த 10 ஆம் திகதி முதல் கந்தபுராணபடனம் இடம்பெற்று வருகிறது. இம் மாத இறுதியில் இடம் பெறவிருக்கும் கந்தபுராணப் பூர்த்தி விழாவில் பௌராணிகர்களான மு. ஆறுமுகம், சி. தம்பிஐயா ஆகியோர் பாராட்டிக் கௌரவிக்கப்படவுள்ளனர். (ஐ–7)

## தொலைபேசி வழங்க கோரிக்கை

அரியாலை, பெப். 27

யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி நுகர்வோர் கூட்டுறவுச் சமாசத்திற்கு தொலைபேசி இணைப்பை ஏற்படுத்தி தருமாறு சமாச தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் ரெலிகொம் நிறுவனத்தைக் கேட்டுள்ளார்,

கொழும்பில் இருந்து பொருள்களை வடபகுதிக்கு கொள்வனவு செய்வதற்கு வசதியாக இந்த வெளியூர் தொலைபேசி இணைப்பை ஏற்படுத்தித்தருமாறு அவர் கேட்டுள்ளார். (ஐ–5–17)

## ஞானச்சுடர் வெளியீடு

கொழும்புத்துறை, பெப். 27

தொண்டமானாறு அருள்மிகு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயச் சுற்றாடலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நூல் வெளியீடு ஆச்சிரமத்தின் தலைவர் சு. திருப்பெருங்கிரிநாதன் தலைமையில் நடைபெறும்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் பேரவையின் மாதாந்த வெளியீடான ''ஞானச்சுடர்'' மலர்வெளியீட்டை ஆரம்பித்து வைத்து ஆசியுரை நிகழ்த்துவார்.

நூல் ஆய்வுரையை நெல்லியடி மத்திய மகா வித்தியாலய ஆசிரியரும், எழுத்தாளருமாகிய ஐ. சண்முகலிங்கம் நிகழ்த்த உள்ளார். [ஐ–30]

# வடமராட்சி தொலைபேசி சேவை இன்னும் முழுமையாக இயங்கவில்லை

வடமராட்சி, பெப். 27

வடமராட்சி பிரதேசத்துக்கான தொலைபேசி இணைப்பில் சர்வதேச தொலைபேசிச் சேவையும், நாணயக் குற்றி தொலைபேசிச் சேவையும் சில நாள் இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளன.

தொலைபேசிச் சேவை இங்கு ஆரம்பிக்கப்பட்ட தினத்துக்குப் பின்னர் உள்ளூர், வெளியூர் இணைப்புகள் இயங்காத நிலையிலிருந்தன.

மந்திகைச் சந்தியில் வல்லிபுரம் வீதியில் உள்ள கட்டடம் ஒன்றில் சர்வதேச தொலைபேசிச் சேவை கடந்த ஞாயிறு முதல் தினமும் காலை 8.30 மணி முதல் பிற்பகல் 5 மணி வரை நடைபெற்று வருகிறது.

மந்திகை ஆஸ்பத்திரி வீதியில் உள்ள தனியார் கடை ஒன்றின் முன் அமைக்கப்பட்ட நாணயக் குற்றி தொலைபேசி சில வாரங்களாக செயலிழந்திருந்தது.

இந்நாணயக்குற்றிதொலைபேசி நேற்று முன்தினம் முதல்வீதிஓரம் தனியான கூடு ஒன்றில் அமைக்கப்பட்டு செயற்பட்டு வருகிறது.

இதே நேரம் தபால்நிலையங்களுக்கோ ஏனைய திணைக்களங்களுக்கோ, தனியாருக்கோ இன்னமும் தொலைபேசி இணைப்பு வழங்கப்படவில்லை.

ஏற்கனவே மந்திகை அரசினர் ஆதாரவைத்தியசாலை, புலோலி உபதபால் நிலையம் ஆகியவற்றுக்கு வழங்கப்பட்ட தொலைபேசி இணைப்பு இன்னமும் செயற்படத் தொடங்கவில்லை.

## தம்புள்ளவில் குண்டு வெடிப்பு

தம்புள்ள நகரில் நேற்று முன்தினம் தொடர்ச்சியாக எதிரொலித்த இரு குண்டு வெடிப்புகள் காரணமாக அப்பிரதேசம் அதிர்ந்தது.

கடைகள் யாவும் மூடப்பட்டன இ. போ. ச. தனியார் வாகனங்கள் யாவும் வேகமாக விரைந்தன. (இ–21)

## புதிய பணத்தாள் புழக்கத்தில்

தென்மராட்சி, பெப். 27

இலங்கையின் 50 ஆவது சுதந்திர தினத்தன்று வெளியிடப்பட்ட 200 ரூபா பெறுமதியான நோட்டுக்கள் யாழ். மாவட்ட மக்கள் வங்கி கிளைகளுக்கு வந்துள்ளன.

இவை தற்போது பொது மக்களின் புழக்கத்துக்காக வங்கிகளில் வழங்கப்பட்டு வருகின்றன. (ஐ–117)

## பாசையூர்ப்பகுதியில் மின்சாரம் தடை

அரியாலை, பெப். 2

பாசையூர், ஈச்சமோட்டை, கொய்யாத்தோட்டம் போன்ற பகுதிகளில் கடந்த ஒருமாதகாலமாக மின் விநியோகம் தடைப்பட்டுள்ளது.

பாசையூரில் இருந்த ஜெனரேற்றர் கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர் பழுதடைந்ததாலேயே இப்பகுதிக்கான மின்சார விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது.

அந்த ஜெனரேற்றர் இன்னும் திருத்தப்படவில்லை. (ஐ–17)

## இலவச ஆங்கில வகுப்பு

கொழும்புத்துறை, பெப்·27

யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகத்தால் நடத்தப்படும் இலவச ஆங்கில வகுப்பு மீண்டும் மார்ச் மாதம் 7ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நல்லூர் விஞ்ஞானக் கல்வி நிலையத்தில் ஆரம்பமாகும் எனகழகத்தின் தலைவர் லயன் வைத்திய கலாநிதி எஸ். எஸ். அருளானந்தம் தெரிவித்தார்.

இத்திகதிக்கு முன்னர் இவ் இலவச வகுப்பில் பங்குபற்ற விரும்புவோர் தமது பெயர் விவரங்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார்.

## 9 படையினரின் சடலங்கள் மீட்பு

கொழும்பு, பெப். 27

வெற்றி உறுதி யுத்தப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் 9 படையினரின் சடலங்கள் மீட்கப்பட்டதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற மோதலில் கொல்லப்பட்டவர்களின் சடலங்களே இவை என அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (இ–21)

## ப. நோ. கூ. சங்கக் கிளையில் ம. எண்ணெய் கசிந்து பொருள்கள் நாசம்!

அரியாலை, பெப். 27

யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நல்லூர் (12 ஏ) கிளையில் மண்எண்ணெய் பரல் கசிந்து ஓடியதால் கிளையில் இருந்த அத்தியாவசியப் பொருள்கள் நாசமாகியுள்ளன.

சுமார் நாற்பது ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட பொருள்கள் மண்ணெண்ணெயில் நனைந்து பழுதடைந்துள்ளதாகசங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேசமயம் சங்க கிளைகளுக்கு வழங்கப்படும் மண் எண்ணெயை பாதுகாப்பாக வைத்து மக்களுக்கு வழங்க வேண்டும் என்றும், பரல்களில் ஏதாவது துவாரம் இருக்கும் பட்சத்தில் அவற்றை ஏனைய பொருள்களுடன் சேர்த்து வைக்க வேண்டாம் எனவும் சங்கத் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் சகல கிளை முகாமையாளர்களையும் கேட்டுள்ளார். (ஐ–17)

# மனிதநேயம் மிக்க சமூகம் உருவாக உழைக்கவேண்டும்

## மன்னார் ஆயர் அழைப்பு

நெடுந்தீவு, பெப். 27

'சிறுவர்களுக்கு கல்வியுடன் ஆன்மீக அறிவையும் புகட்டுவதற்குப் பெற்றோர்களும் ஆசிரியர்களும் முன்வர வேண்டும். ஒரு நல்ல மனிதநேயம் மிக்க சமுதாயத்தை உருவாக்கும் பணியில் இருந்து இவர்கள்தவறிவிடக்கூடாது; அதற்காக உழைக்க வேண்டும்.'

இவ்வாறு மன்னார் ஆயர் பேரருட்திரு. இராயப்பு யோசேப் அடிகளார் சகலருக்கும் அழைப்பு விடுத்தார்.

நெடுந்தீவுக்கு விஜயம் செய்திருந்த ஆயர் இராயப்பு யோசேப்புவை கௌரவித்து புனித யுவானியார் ஆலய முன்றலில் மாபெரும் வரவேற்பு நிகழ்வு ஒன்று அண்மையில் நடைபெற்றது.

நெடுந்தீவு பங்குத் தந்தை அருட்திரு. மொன்வெட் அடிகள் தலைமையில் நடைபெற்ற அந்த நிகழ்வில் ஆயர் இராயப்பு யோசேப் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:–

கிறிஸ்து நம்மிடையே அன்பையும் நட்பையும் வளர்க்க வேண்டும் என்பதற்காகப் பாடுபட்டார். அவர் கடவுளாக அல்ல நண்பனாகவே மக்களை நேசித்தார். வாழ்க்கையில் நல்ல மனிதர்களாக வாழக் கிறிஸ்தவ பண்புகளைப் பழகிக் கொள்ள வேண்டும்.

நான் மிகவும் கஷ்டமான நிலையிலும் கூட எனது கல்வியையும ஆன்மீக விருப்புக்களையும் சிறுவயதில் இருந்தே கைக்கொண்டு வந்தவன். இந்தத் தீவகம் செல்வம் நிறைந்த இடமாக இருந்ததற்கு எமது முன்னவர்கள் கைக்கொண்ட நெறிமுறைகளே காரணம். ஆண்டவர் ஏழைகள்மீது அன்புசெலுத்து என்று கூறியுள்ளார். ஆண்டவரின் அந்தக் கூற்றின்படி வாழுங்கள்; அதுவேஉங்களுக்கும் உங்கள் தீவகத்திற்கும் உயர்ந்த மதிப்பைத் தேடித் தரும் — என்று கூறினார்.

நெடுந்தீவு பங்குத்தந்தை அருட்திரு. மொன்வெட் அடிகள் தமது தலைமை உரையில் கூறியதாவது:–

இன்றைய காலம் மனிதர்கள் உறவு சொந்தங்களைப் புரிந்து நிம்மதியிழந்து அகதி நிலையில் அலையும்போது மறைமாவட்டப் பணிகள் மிகக் கடினமானதாகும். மக்களுடைய கஷ்டங்களையும் துன்பங்களையும் இயன்ற அளவு போக்கும் பணியில் ஆயரவர்களது கடமை மன்னார் மாவட்டத்தில் முழுவீச்சில் இடம்பெற்றது.

மத வேறுபாடுகள் இன்றி மன்னார் மாவட்டத்தில் அவராற்றிய உதவிப்பணிகள் பலராலும் போற்றப்பட்டன. இன்றுள்ள நிலையில் அவரது சேவைகள் எமது மக்களுக்கு இன்றியமையாதவை என்றார்.

அருட்செல்வி மேரிபுஸ்பம் தமதுஉரையில் கூறியதாவது:–

இளமைக் காலம் முதலே இறைபணியில் தங்களை அர்ப்பணித்துக் கொண்ட குடும்பத்தில் இருந்து பிறந்த ஆயர் இராயப்பு யோசேப் அடிகள் தமது தாய்தந்தையர் அடியொற்றி கிறிஸ்துவின் வழி தொடர்ந்து ஒரு நல்ல மேய்ப்பராக மன்னார் மாவட்டமக்களை வழிநடத்திச் செல்கின்றார். இந்த மண்ணில் இருந்து சுமார் பத்துக்கும் அதிகமான குருமார் தோன்றியுள்ளனர். மேலும் பல துறவிகளும் குருமார்களும் தோன்றக் கூடியதாக பெற்றோர்கள் சிறுவர்களுக்கு நல்வழிகளைக் காட்டவேண்டும. இராயப்பு யோசேப் அடிகள் ஆயராக இங்கே நிற்பதன் மூலம் நெடுந்தீவு பெருமை பெறுகிறது—என்று சொன்னார். அருட் திரு. கஷ்மீர் அடிகள், அருட்திரு. மங்கள ராசா, புலவர் அ. வெ. அரிய நாயகம், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் சி. அருளப்பு, வைத்திய அதிகாரி வை. யோகேஸ்வரன் உட்பட மற்றும் பலரும் பேசினார்கள்.

நெடுந்தீவு பங்குமக்கள், கத்தோலிக்க ஆசிரியர் சங்கம் உட்பட பொதுமக்கள் ஆயருக்கு மலர்மாலை சூடி அன்பளிப்புகள் வழங்கிக் கௌரவித்தனர்.

கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (அ-111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

6 ஸ்ரீ 3787 இங்கிலாந்தில் தயாரிக்கப்பட்ட சுப்பர் மினிஸ் கார் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: அ. இரவீந்திரதாசன். இல. 14 இராமநாதன் றோட், நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (53651)

### இறைச்சிக்கோழி

புறொயிலா இறைச்சிக் கோழி மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. எந்நேரத்திலும் தொடர்பு கொள்ளலாம் சி. ரவீந்திரன், 3-ம் கட்டையடி, மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை. (53655)

### பெற்றுக்கொள்ளவும்

தனங்கிளப்பில வசிக்கும் தி. விக்னேஸ்வரன் என்பவரால் தனங்கிளப்பு மதாவிற் குளத்தில் ஒரு சிறு தொகைப் பணம் கண்டெடுக்கப்பட்டது. உரியவர்கள் இப் பணத்தை J. 299 கிராம சேவை அலுவலரிடம் தகுந்த ஆதாரங் காட்டி அலுவலக நாளில் பெற்றுக் கொள்ளவும். (53657)

### திருத்த வேண்டுமா?

சகல ரி. வி. நிகழ்ச்சிகளையும் தெளிவாகப் பார்ப்பதற்கு அன்ரனா பொருத்திக் கொள்ளவும், ரி. வி. க் றேடியோ, டெக், மணி, கூடுகள் திருத்திக் கொள்ளவும் வீனஸ் தனபாலசிங்கம், Diploma In Electronic Engineering. London. 284, ஸ்ரான்லி வீதி, (நாகவிகாரைக்கு முன்பாக) யாழ்ப்பாணம். [சி/2843]

சகல விதமான தட்டச்சு இயந்திரங்கள், றோணியோ இயந்திரங்கள் சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும். தொடர்பு :R. மருதம், 66, மணிக்கூட்டு வீதி (ஆஸ்பத்திரி முன்பாக), யாழ்ப்பாணம். [53553[

### இசை வகுப்புகள்

ஓர்கன், கிற்றார், றம்ஸ், பொங்கோறம் ஆரம்பம்: 01-03-1998 ஞாயிறு காலை 10 மணி. புதியமாணவ மாணவியர் இந்நேரம் வரவும். எ. அருள்நாதன், மெயின் வீதி, மானிப்பாய். [53599]

### நாய்க்குட்டிகள்

கிரேடன் (ஆண். பெண்), டோபமன் பிஞ்சர், பிரெஞ்ச் புல்டோக் (ஆண், டெண்) பொமனேரியன் (தனிக் கறுப்பு) நாய்க்குட்டிகள் உடன் விற்பனைக்குண்டு. 'மல்லிகாபதி' சந்தை முன் ஒழுங்கை, மானிப்பாய். [53632]

### உடன் விற்பனைக்கு

பிறிமா ஹைலைன்பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் மற்றும் பெரிய இன கோல்பிஸ், கலிக்கோ வளர்ப்பு மீன்களும் உடன் விற்பனைக்கு உண்டு. 'மல்லிகாபதி', சந்தை முன் ஒழுங்கை, மானிப்பாய். [53631[

### மணமகள் தேவை

அரச திணைக்களத்தில் எழுது வினைஞராக கடமையாற்றும் செவ்வாய்க் குற்றமுடைய மணமகனுக்கு A/L படித்த அல்லது, உத்தியோகம் பார்க்கும் 30—35 வயதுடைய அழகான மணமகள் தேவை. தொடர்பு: மே/பா இல. 705, உதயன்பணிமனை, யாழ்ப்பாணம். [53652]

### பாலர் ஆசிரியராக..

மேற்படி பயிற்சிபெற க.பொ.த (சாதாரணதர) தகைமையுடையோரும், மேல் தகைமையுடையோரும் தபால் வழியில் ஆறு மாதத்தில் பயிலலாம்.

**பாலர்**
**ஆசிரியர் சங்கம்**
**20, அச்சக ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.**

(53588)

## பாதிப்புற்றோர் கலந்துரையாடல்

கொழும்புத்துறை, பெப். 27

ஆசிரிய நியமனத்தில் உரிய வெட்டுப் புள்ளிகளைப் பெற்று வதிவிட வேறுபாடுகளால் பாதிப்புற்றோர்களுக்கான ஒன்றுகூடல், நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நாளை சனிக்கிழமை காலை 9–30 மணிக்கு நடைபெறும்.

ஆசிரிய நியமனம் கிடைக்காததால் பாதிப்பிற்குள்ளான சகலரும் விவரங்களுடன் கலந்துகொள்ளுமாறு யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை கேட்டுள்ளது. (ஐ–30)

## சிறுவன் காயம்

இளநீர் பிடுங்குவதற்காக மரத்தில் ஏறிய சிறுவன் கீழே விழுந்து காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கரவெட்டியைச் சேர்ந்த செல்வராஜா செல்வகுமார் (வயது 13) என்பவரே காயமடைந்தவர் ஆவார். (இ-139)

## பாலர் பாடசாலை திறப்பு விழா

கொழும்புத்துறை, பெப். 27

யுனிசெவ் நிறுவனத்தின் உதவியுடன் புனரமைக்கப்பட்ட தொல்புரம் கிழக்கு விக்கினேஸ்வரா சனசமூக நிலைய பாலர் பாடசாலைத் திறப்பு விழா நிலையத் தலைவர் தி. உதயசூரியன் தலைமையில் நாளை சனிக்கிழமை முற்பகல் 9.30 மணி முதல் நடைபெறும்.

பிரதம விருந்தினராக யுனிசெவ் நிறுவனத்திட்ட உத்தியோகத்தர் திருமதி பெனி புறாணியும், யுனிசெவ் நிறுவனத்தைச் சேர்ந்த எஸ். ஆனந்தராசாவும் கலந்து கொள்வர். (ஐ-30)

## திருத்தவேலை பூர்த்தி

கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலைய கட்டட புனரமைப்பு வேலைகள் முடிவடைந்துள்ளன.

கட்டட திறப்பு விழா மிக விரைவில் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ–17)

## நினைவஞ்சலி

செல்வி
**செலீனா ஜெயராணி மண்டலநாயகம்**

அன்பு மனங்கள் ஏங்கி நிற்க
ஆசைக் கரங்கள் அரவணைக்க
மாயமாய் மறைந்தாயே அன்று நீ!
சோகமே உருவானோம் இன்று நாம்!

நீங்காத நினைவுகளில் நீந்தும்:
குடும்பத்தவர்

லோட்டன் வீதி,
மானிப்பாய்.

(53593)

## SIYANA'S

**மீண்டும் யாழ். நகரில்!**

★ அலுமினிய பைப்புகள் (பார்) ★ சோக்கேஸ்,
★ கடை பிற்றிங்குகள் செய்வதற்குரிய அலுமினிய பீடிங்குகள் ★ கண்ணாடிகள் ★ ரிவேட்,
★ பிளைவூட் ★ அண்ரனா பைப்புகள்
★ போமிக்கா சீட் மற்றும்
★ எலெக்ரிக் ரில் மெசின்

மேலும் இது சம்பந்தமான சகல விதமான பொருள்களுக்கு நீங்கள் நாடவேண்டிய இடம்:

**சியானாஸ்**

இல. 77, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(கல்யாணி கிறீம் ஹவுஸ் அருகில்) (53656)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



**திருமதி சுப்பிரமணியம் பூபதி**

தோற்றம்: **18 - 01 - 1935**

மறைவு: **28 - 01 - 1998**

எங்கள் பாசமிகு குடும்பத்தலைவியுமாய், அன்பின் திருவுருவுமாய் வாழ்ந்து எங்களுக்கு நல்வாழ்வளித்த வழிகாட்டியே! எங்களுக்காகவே வாழ்ந்து எங்களுக்காகவே பிரார்த்தித்து எங்கள் நினைவுடனே இயற்கை எய்திய நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஒரு மாதமாகியும் உங்கள் திருவுருவம், பாசம், நினைவுகள் என்றென்றும் எங்கள் மனதில் நீங்காது நிலைத்து நிற்கும்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

தங்கள் பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு. (53629)

## விக்ரோறியன்ஸ் விளையாட்டுக் கழகம்

நடத்தும்
விலகல் முறையிலான
**மென்பந்து கிரிக்கெற் சுற்றுப்போட்டி**

7 பேர்களுக்கான 12 பந்து மாற்றங்களைக் கொண்ட இப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள், பாடசாலைகள் தமது பதிவுகளை **10-03-98** இற்கு முன்பாக சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் பாடசாலை நேரத்தில் மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

அணிகளுக்கான குலுக்கல் தெரிவு **12 - 03 - 98** காலை 10–00 மணியளவில் கல்லூரியில் நடைபெறும். இத்தருணம் பதிவு செய்த கழகப் பிரதிநிதி தவறாது சமுகம் தரவும்.

அனுமதிக் கட்டணம்: 100 ரூபா

விக்ரோறியன்ஸ் விளையாட்டுக் கழகம்
சுழிபுரம். (53671)

## தென்னிந்திய திருச்சபை யாழ். ஆதீனம் பொன்விழா

தென் இந்தியத் திருச்சபையின் பொன்விழா நிகழ்ச்சிகள் நாளை **28 - 02 - 98** காலை 9.00 மணிக்கு நன்றி செலுத்தும் ஆராதனையுடன் ஆரம்பமாகும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திரு. A. ஜெயராஜன்
செயலாளர்.

ஆதீன காரியாலயம்,
வட்டுக்கோட்டை. (சி/2975)

## யா/வேம்படி மகளிர்கல்லூரி பழைய மாணவர் சங்கம்

யாழ். மாவட்டத்திலுள்ள யாழ்/வேம்படி மகளிர் கல்லூரியில் சகல பழைய மாணவிகளையும் எதிர்வரும் 28 – 02 - 1998 சனிக்கிழமை காலை 10 00 மணியளவில் கல்லூரி மண்டபத்தில் ஒன்றுகூடும்படி கேட்டுக் கொள்கிறோம்.

செயலாளர்,
**பழைய மாணவர் சங்கம்.**

1998 - 02 – 24 [சி/2966]

## வடமராட்சியில் மீண்டும் சென்ரல் சேவிஸ்ஸ்ரேசன்

யாழ்ப்பாணம் றோட், நெல்லியடி.

அதே இடத்தில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது

தரமான முறையில் குறைந்த கட்டணத்தில் முன் அனுபவமும் திறமையும் உள்ள தொழிலாளர்களால் சகல வாகனங்களும் சேவிஸ் (SERVICE) செய்து கொடுக்கப்படும்.

—நிர்வாகி

(சி/2960)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உதயன்

## குளறுபடி வேண்டாம்

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள விவசாயிகளில் மேலும் ஐயாயிரம் பேருக்கு இலவசமாக மண்வெட்டிகள் வழங்கப்பட உள்ளன.

குடாநாட்டு மக்களின் பிரதான தொழில் விவசாயம். போர் காரணமாகவும், இடம்பெயர்வு காரணமாகவும் விவசாயம் தடைப்பட்டும் பாதிப்படைந்தும் கிடக்கின்றது.

இதனால் விவசாயிகளில் பலர் தமது தொழிலை முற்றிலும் புதிதாகவே தொடங்க வேண்டியுள்ளது. ஆனால் அதற்குப் பணம் முதலிட முடியாத கஷ்டத்தில் பலர் உள்ளனர்.

இந்தக் கஷ்டத்தைக் கருத்திற் கொண்டே விவசாயிகளின் தொழில் உபகரணங்களில் பிரதானமான மண்வெட்டிகளை இலவசமாக வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் ஏற்கனவே சென்ற வருட இறுதியில் மண்வெட்டிகள் இலவசமாக வழங்கப்பட்டன.

இலவச மண்வெட்டிகள் விநியோகம் சீராக நடைபெறவில்லை என்றும் பல குளறுபடிகள், ஊழல்கள் இடம்பெற்றன என்றும் விவசாயிகள் தரப்பில் அப்போது அதிருப்தி தெரிவிக்கப்பட்டது.

விவசாயிகள் சம்மேளனங்கள், கிராமசேவை அலுவலர்கள், விவசாயப் போதனாசிரியர்கள்கமநல சேவை நிலையங்கள், உதவி அரசாங்க அதிபர்கள் இந்த மண்வெட்டி விநியோகத்தில் சம்பந்தப்பட்டிருந்தனர்.

இவர்களிலேயே ஒரு சாரார் மறுசாரார் மீது குற்றஞ் சுமத்தும் அளவுக்கு, மண்வெட்டி விநியோகத்தில் பெரும் குளறுபடிகளும், சீர்கேடுகளும், தில்லுமுல்லுகளும் நடைபெற்றன.

மறுபக்கத்தில், உண்மையான விவசாயிகள் தங்களுக்கு மண்வெட்டிகள் கிடைக்கவில்லை என்றும், அதிகாரிகளின் விருப்பு வெறுப்புக்கு ஏற்பவே அவை வழங்கப்பட்டன என்றும் முறைப்பட்டார்கள்.

கிடைத்த மண்வெட்டிகளை அவசரமாகக் கொடுத்து முடித்துவிட வேண்டும் என்ற அடிப்படையில், மண்வெட்டி பெறுவதற்கான தகுதி இடத்துக்கு இடம் வெவ்வேறு விதமாக, அதிகாரிகளின் ''வசதிக்கேற்ப'' வகுக்கப்பட்டதாகவும் முறையிடப்பட்டது.

இம்முறையும் அவ்வாறு நடக்கக் கூடாது. அதிகாரிகள் ''வசதி'' செல்வாக்கு, அதிகாரத்தனம் உண்மையான விவசாயிகள் வயிற்றில் அடித்துவிடக் கூடாது. தகுதியானவர்களுக்கு, பாதிக்கப்பட்டவர்களுக்கு, விவசாயத்தில் உண்மையாகவே ஈடுபடுபவர்கைகளுக்கு மண்வெட்டிகள் போய்ச்சேரப் பார்த்துக்கொள்ள வேண்டும். அப்போதுதான் விவசாயத்தை வளர்க்கமுடியும்.

இலவசம்என்றால்நஞ்சையும் உண்போம் என்ற போக்கை பொதுமக்களும் தம்மிடமிருந்து விரட்டுவது அவசியம்.

# அறிவொளி அகங்காரத்தைக் கூறுபோடும்; முருகனைத் துதித்திட அந்த ஒளி தெரியும்

முருகன் என்றாலே, தமிழ் நினைவுக்கு வரும். தமிழ் என்றால் திருப்புகழ் மனதில் தோன்றும். அந்தத் திருப்புகழால் முருகனைப் பாடிய, அருணகிரியார் தனியாக முருகப் பெருமானை மட்டும் கும்பிட்டு நிற்காமல் வேலையும், மயிலையும், சேவலையும் குறிப்பிட்டுப் பாடிய பாடல்கள் பல. அவற்றில் உள்ளடங்கிய தத்துவங்கள் பலப்பல.

ஞானப் பெருமானுடைய திருக்கரத்திலே படையாக விளங்குகின்ற வேலையும், வாகனமாக இருக்கிற மயிலையும், வெற்றிக்கொடியாக இருக்கிற சேவலையும் சேர்த்துத் துதிப்பது அருணகிரியார் வழக்கம். சேவல், விருத்தம், மயில் விருத்தம், வேல் விருத்தம் என்று அவற்றைத் தனித்தனியே பாடியிருக்கிறார். வேல் வகுப்பு, மயில் வகுப்பு என்று இரண்டு வகுப்புகள் வேறு பாடியிருக்கிறார்.

அவர் பாடிய நூல்கள் பல. திருப்புகழ், திருவகுப்பு, கந்தர் அந்தாதி, கந்தர் அலங்காரம், வேல், மயில், சேவல் விருத்தங்கள், கந்தர் அநுபூதி என்ற ஆறு தொகுதிகளை அவர் பாடினார். இந்த ஆறு நூல்களுக்குள்ளும், இறுதியில் பாடிய நூல் கந்தர் அநுபூதி. அதில், முதல் பாட்டில், 'ஆடுகின்ற பரியாகிய மயிலையும், படையாகிய ஞான வேலையும், வெற்றிக் கொடியாகிய சேவலையும் பாடுகின்ற உத்தியோகத்தை ஆண்டவனே எனக்குக் கொடுப்பாயாக' என்று விண்ணப்பித்துக் கொள்கிறார்.

''ஆடும் பரிவேல்
அணிசேவல் எனப்
பாடும் பணியே பணியா
அருள்வாய்''

### வேலின் தத்துவம்

வேல் என்பது வெறும் வெள்ளி அல்லது இரும்பு உலோகமல்ல. மயிலும், சேவலும் வெறும் பறவைகள் என்று மட்டும் நினைப்பதற்கு உரியன அல்ல. அவை சில உண்மைகளைப் புலப்படுத்தும் தெய்வீகச் சின்னங்கள் என்கிறார். அருணகிரிநாதர். கொடுமுடிகளோடு கூடிய பெரிய மலையைக் கூறு போட்டது என்று பொருள். பெரிய மலையாக நிற்பது எது? மனிதனுடைய அகங்காரம் தான் மலைபோல் நிற்கிறது. ஆடாமல் அசையாமல், பின்னாலே இருக்கிற அத்தனை பொருள்களையும் மறைத்துக்கொண்டு, நிற்கிற மலைபோல, 'நான்', 'நான்' என்கிற அகங்காரம் மற்றவர்களுடைய நலன்களையெல்லாம் மறைத்துக் கொண்டு நிற்கிறது.

**ஞானக் கதிர்**

மமாகாரங்களாகிய கொடுமுடிகளோடு வளர்ந்து நிற்கும், அகங்காரமாகிய மலையைக் கூறுபோட வேண்டுமானால், ஞானம் வரவேண்டும்.

சிகராத்திரி கூறிட்ட வேலோடு செஞ் சேவலையும் பாட வேண்டும் என்கிறார் அருணகிரிநாதர்.

### சேவலின் தத்துவம்

சேவல் ஆண்டவனுடைய வெற்றிக் கொடியாக விளங்குகிறது. சேவல் என்று நினைத்த மாத்திரத்திலே நல்லவர்களுக்குப் புற இருளைப் போக்கடிக்கின்ற சூரியனுடைய நினைவு வரும். முருகனிடத்தில் ஈடுபட்டவர்களுக்கு அஞ்ஞான இருளைப் போக்கடிக்கின்ற ஞானபானுவாகிய முருகனுடைய நினைவு முந்தும்.

அஞ்ஞானத்தில் உறங்கி வீழ்ந்து கொண்டிருப்பவர்எளை, 'ஞானபானுவாகிய கம்பெருமான் எழுந்தருளுகின்றன்; எனவே தூங்காதீர்கள்' என்று அறைகூவி அழைப்பது சேவல்.

சக்திசிவனிடத்தில் இருந்து தோன்றிய மாத்திரத்தில் முதன் முதலாகத் தோன்றியது நாத தத்துவம். அந்த நாதத் தத்துவமே சேவல் தான். அதன் பின்னர் எஞ்சியுள்ள எல்லாத் தத்துவங்களும் வெளிப்பட்டன. உலகத்துக்கு சேவல் கூவும் போது, புற இருள் விலகி, பொழுதுவிடிகிறது; அஞ்ஞான இருள் நீங்கி, ஞான ஒளி பிரகாசிப்பதற்கு அடையாளமாகக் கூவும் சேவல் எம்பெருமான் திருக்கரத்திலுள்ளது; அது செஞ்சேவலாக விளங்குகின்றது. வேல், சேவல்ஆகியஇரண்டோடுமயிலையும் பாடுகின்ற பாணிஎப்போதும் இருக்கவேண்டும்என்பது அருணகிரியார் ஆர்வம்.

**கி. வா. ஜகந்நாதன்**

முதலில் வேலையும், சேவலையும் சொன்னவர், மயிலை மறக்கவில்லை. அதனை அடுத்த அடியில் பாடுகிறார்.

பணிபாசம் என்றால் பாம்பாகிய கயிறு என்றுபொருள். இங்கே நாகபாசம் எது? நம்முடைய பாசபந்தங்கள் தான். பிறவிக்குக் காரணமான இந்தப் பாசபந்தங்களுக்குக் கட்டுப்படுவதனாலே உயிர் குலைந்து விடுகிறோம். இந்தக் கட்டை அறுத்துக் கொண்டால்தான் மயக்கம் தீரும். சுற்றிச் சுழன்று கொண்டிருக்கிற பாம்பைக் கொத்திக் கொத்திக் கொன்றுவிடும் மயில். அது ஓங்காரத்தின் வடிவம். பாம்பு பெரிய பாசமாக இருப்பதனாலே, பாம்பை அடக்குகின்ற மயில் ஓம்கார மந்திரமாக இருக்கிறது. அந்த மயில் பிரணவத்திற்குப் பொருள் சொன்ன முருகனின் வாகனம் என்பது எத்தனை பொருத்தம்?

சேவல் நம்மை அறியாமை எனும் உறக்கத்தினின்றும் எழுப்ப, மயில் நம் பாசங்களை அறுக்க வேல் நம்அகங்காரத்தைக் கூறுபோட்டு அறிவொளியை உண்டாக்க, வேலும், மயிலும் சேவலும் துணை என்று முருகனை மனமுருகப் பிரார்த்திக்க வேண்டும். ★

(நன்றி:– ஞானபூமி)

## தவக்கால சிந்தனை
(3 ஆம் நாள்)

சுமைகளை சுமக்கிறவன் பாக்கியவான். பல நோய்கள் வாட்டும் இன்றைய சூழலில் விரக்தி, வேதனையில் எம்மை நாம் மறக்கின்றோம். நம்பிக்கையை இழக்கிறோம். இதனால் எம் வார்த்தைகளும் நாஸ்தீகம் பேசுகிறது.

உண்மையில் சோதனையில்தான் தனது உள்ளம் உள் உணர்வை வெளிப்படுத்தும் நம்பிக்கை தளராதநிலையில்இறைவனை அதிகம் நேசித்து வேண்டிக் கொண்டாள் இராயப்பரின் மாமியார்.

காய்ச்சலில் துவண்டு கொண்டு இருந்த போதும் நம்பிக்கைஇழக்கவில்லை. அவளது நம்பிக்கையை உணர்ந்த யேசு ''அவளுடைய கையைத் தொடவே, காய்ச்சல் அவளை விட்டு நீங்கியது. அவள் எழுந்து அவருக்குப் பணிவிடை புரிந்தாள்.'' இவை அன்று நடந்தது.

இன்று பலரும் நோயிற் துவண்டு கொண்டு இருப்பதைக் கண்டும் ஆறுதல் கொடுக்க, நம்பிக்கையூட்ட இறையருளின் வல்லமை எமக்கும் உண்டு என்ற நம்பிக்கைகொள்வோமா? மற்றவருக்கு நம்பிக்கை ஊட்டுவோமா? அந்த அருளினைப்பெற ஆன்மீக ஆழத்தில் எம் சிந்தனைகளை இந்நாளில் வ[illegible]படுத்துவோமா?

—யோசப் பாலா

## மெய்வல்லுநர் போட்டிகள்

நெல்லியடி, பெப். 27

கரணவாய் மகாவித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி மார்ச் 5 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் செ. சதானந்தம் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக கரவெட்டி பிரதிக் கல்விப்பணிப்பாளர் வி. செல்வராசா கலந்து கொள்ளவுள்ளார்.

(ஐ–5–109)

★ ★ ★

வடமராட்சி, பெப். 27

பருத்தித்துறை வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கல்லூரி அதிபர் செல்வி அன்னப்பாக்கியம் கனகரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக மந்திகை அரசினர் ஆதார வைத்திய சாலை டாக்டர்திருமதி ஆர். சிதம்பரநாதனும் சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம், யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ பீடத்தலைவர் எம். நடராஜசுந்தரம் ஆகியோரும் கலந்து கொள்வர். (ஐ–173)

★ ★ ★

வடமராட்சி. பெப்.27

புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை இல்ல மெய்வன்மைப் போட்டி புலோலி கிராமக்கோட்டடி மைதானத்தில் நாளை சனிக்கிழமை அதிபர் வே. நேசரட்ணம் தலைமையில் நடைபெறும். இப் போட்டிக்கு யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கை நெறித் தலைவர் மா. நடராஜசுந்தரம் பிரதம விருந்தினராகவும், பருத்தித்துறை கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் வே.தி. செல்வரத்தினம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வார்கள், (ஐ173)

## 163 ஆவது ஜெயந்திவிழா

யாழ்ப்பாணம், பெப். 27

திருநெல்வேலி இராம கிருஷ்ணாலயத்தில் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3–30 மணிமுதல் இராம கிருஷ்ணபரஹம்சரின் 163 ஆவது ஜெயந்தி விழா நடைபெறவுள்ளது.

பஜனை, பூசை மற்றும் மாணவர்களின் சொற்பொழிவுகள் இன்னிசை என்டன இடம்பெறும். (ஐ)

## தவற'விட்ட அ.அட்டைகள் சிவில் அலுவலகத்தில்

யாழ்ப்பாணம், பெப். 27

பலரால் தவறவிடப்பட்ட ஒரு தொகுதி அடையாள அட்டைகள் யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் சிவில் நிர்வாக அலுவலக அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு அவற்றைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

அடையாள அட்டைகளைத் தவறவிட்டவர்களது பெயர், அடையாள அட்டை இலக்கங்கள் பினவருமாறு:

★ பரமு தேவராஜா (503233517V)

★ தே. விஜியபாரதி (372521724V) விசேட அடையாள அட்டை (0903015204)

★ துரைராசா சங்கரஈஸ்வரன் (642400169V)

★ நாகலிங்கம் ரத்தினசபாபதி (411811476V)

★ சதாசிவம் ரமேஸ் (770403677V)

★ பத்மநாதன் கிரிதரன் (091013380V)

★ சின்னத்துரை விஜியலட்சுமி (617854490V)

★ நாகலிங்கம் சிவசுப்பிரமணியம் (241552950)

★ கந்தையா துரைராசா (மன்னார் மாவட்டம் 004307)

(6–ஐ)

## பூரான் கடித்து மரணம்!

வடமராட்சி, பெப்.27

படுக்கையில் வெள்ளைப் பூரான் கடித்து இளம் யுவதி ஒருவர் பரிதாபமாக மரணமானார்.

அல்வாய் வடக்கைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை பாமினி (16 வயது) என்ற யுவதியே இவ்வாறு மரணமானவராவார்.

வெள்ளைப் பூரான் இரவு நேரத்தில் கடித்ததும் மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட இவர் சில மணி நேரத்தில் அங்கு மரணமானார்.

(ஐ–173)

### உதய வாக்கு

சிந்திப்பவன் மனிதன். வாழ்க்கையின் முன்னேற்றத்தையும், மனித சமுதாயத்தின் முன்னேற்றத்தையும், தேச முன்னேற்றத்தையும் பற்றிச் சிந்திப்பவன் உயர்ந்த மனிதன். இத்தகைய உயர்ந்த மனிதர்களின் சிந்தனைப் புத்தகந்தான் இந்த உலகம்.

பென்சமின் பிராங்ளின்

## நாளை

மாசி 16

சனிக்கிழமை

திதி: துதியை

முன் இரவு 7.23 வரை

நட்சத்திரம்: பூரட்டாதி

முற்பகல் 8.14 வரை.

கரிநாள்

சுபநேரம்: 3.29 – 5.59

ராகு காலம்: 9.29 – 10.59

(இரவுக்கும் பகலுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### செயற்கை மழை பெய்யச் செய்வதற்காக

# மேகங்கள் மீது இரசாயனம் தூவும் இந்தோனேசியப் பணி ஆரம்பமாகும்

ஜகார்த்தா, பெப். 27

**கட்டுக்கடங்காமல் பரவிவரும் காட்டுத் தீயை அணைக்கும் முயற்சியாக செயற்கை மழை பொழிவிக்க மேகங்களின் மீது இரசாயனப் பொருள்களைத் தூவும் பணியை ஆரம்பிக்கவுள்ளதாக இந்தோனேசிய அரசு அறிவித்துள்ளது.**

காட்டுத் தீயினால் மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கும் போர்ணியோ மீது மேகங்களில் இரசாயனங்களைத் தூவுவதற்கு ஏற்ற காலநிலை தற்போது நிலவுவதாக இந்தோனேசிய சுற்றுச் சூழல் அமைச்சர் தெரிவித்துள்ளார்,

மலேசியாவின் கோச்சின் நகரில் ''ஆசியான்'' அமைப்பு நாடுகளின் சுற்றுச் சூழல் துறை அமைச்சர்கள் கலந்து கொண்ட மாநாட்டிலேயே இத்தகவல் தெரிவிக்கப்பட்டது. எனினும் காட்டுத் தீயினைக் கட்டுப்படுத்துவது தொடர்பான புதிய கருத்துக்கள் எதுவும் இம் மாநாட்டில் தெரிவிக்கப்படவில்லை.

விமானங்கள் மூலம் மேகங்கள் மீது இரசாயனத்தை தூவி மழை பொழியச் செய்வது மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று அங்கு தெரிவிக்கப்பட்டது. எனினும் கிழக்கு போர்ணியோவில் கொழுந்து விட்டெரியும் காட்டுத் தீயை அணைக்கப் போதுமான மழையை இதன் மூலம் பெறமுடியுமா என்பது சந்தேகமே எனத் தெரிவிக்கப்படுகிறது.

காட்டுத் தீ பரவ என்ன காரணம் என்பது இன்னும் கூடத் தமக்குப் புரியவில்லை என்பதை இந்தோனேசிய சுற்றுச் சூழல் அமைச்சர் ஒத்துக் கொண்டார். (ஐ)

## ஆணாக மாறிய பெண் குத்துச்சண்டை சாதனை!

பெண்ணாக இருந்து பால் மாற்றம் செய்து ஆணாக மாறிய ஒருவர் குத்துச்சண்டைப் போட்டியில் வெற்றிபெற்று சாதனை படைத்துள்ளார்.

தாய்லாந்தின் தலைநகர் பாங்கொக்கில் பெரும் எண்ணிக்கையில் ரசிகர்கள் திரண்டிருந்த அரங்கு ஒன்றில் இந்தக் குத்துச் சண்டைப் போட்டி நடந்தது

''அவர் ஆண் அல்ல'' என்று எதிரணி ஆட்டக்காரரின் ரசிகர்கள் கூச்சலிட்டபோதிலும் பலத்த கரகோஷத்தின் மத்தியில் இந்த வீரர் இறுதியில் வெற்றியீட்டி பெரும் பரபரப்பை ஏற்படுத்தினார்.

போட்டியில் வெற்றியீட்டியதற்காகத் தனக்கு வழங்கப்பட்ட 900 டொலர்களையும் முழுமையான பால் மாற்ற பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சைக்குப் பயன்படுத்தப் போவதாக அவர் தெரிவித்தார்.

(ஐ)

## பாகிஸ்தான் அரசிலிருந்து அவாமி லீக் விலகியது

இஸ்லாமாபாத், பெப். 27

பாகிஸ்தானில் பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் ஆளும் கூட்டணியில் இருந்து பிரதான கட்சியான சுவாமி லீக் தேசியக்கட்சி வெளியேறி விட்டது.

நாட்டின் வடமேற்கு எல்லையில் உள்ள மாகாணத்தின் பெயரை மாற்றுவமற்கு அரசு மறுத்து விட்டதை அடுத்தே அவாகு லீக் கட்சி அரசில் இருந்து வெளியேறியுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பாக பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் முஸ்லிம் லீக் கட்சியுடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகள் தோல்வி அடைந்துவிட்டதாக அவாமி லீக் பிரதிநிதி தெரிவித்தார்.

(ஐ)

## நூற்றாண்டின் இறுதிச் சூரிய கிரகணம்

ஜோஹனர்ஸ்பேர்க், பெப். 27

இந்த நூற்றாண்டின் இறுதி சூரிய கிகரணம் நேற்று நிகழ இருந்தது. இதனைக் காண்பதற்காக வானியல் நிபுணர்களும், ஆர்வலர்களும் தென்னாபிரிக்காவின் வடபகுதிக்கும், கரூபியன் பகுதிக்கும் படையெடுத்துச் சென்றுள்ளனர்.

பகல் நேரத்தில் 3 நிமிட நேரத்துக்கு பூரண சூரிய கிரகணம் நிகழ உள்ளது. முழு சூரிய கிரகணமும் நடந்து முடிய 5 மணிநேரம் எடுக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## 4 ஈரானியருக்கு தூக்குத் தண்டனை

ஒன்பது வயதுச் சிறுமியை பாலியல் வல்லுறவுக்குட்படுத்தி கொலை செய்தார்கள் எனக் குற்றஞ்சாட்டப்பட்ட நான்கு ஈரானியர்களுக்கு பகிரங்கத் தூக்குத் தண்டனை வழங்கப்பட்டது.

சுமார் 70 ஆயிரம் மக்கள் கூடி நிற்க பகிரங்கமாகக் கொண்டுவரப்பட்ட நால்வரும் கழுத்தில் சுருக்கிடப்பட்டு தொங்கவிடப்பட்டனர்.

சிறுமியைக் கடத்தி கற்பழித்த இவர்கள் பின்னர் சிறுமியை வாளால் வெட்டிக் கொலை செய்துள்ளனர்.

# இலங்கைத் தேயிலைக்கு "எல் - நைனோ" பாதிப்பு!

கொழும்பு, பெப், 27

'எல் – நைனோ' எனப்படும் காலநிலை அனர்த்தத்தின் விளைவாக இலங்கையின் தேயிலை தோட்டத்துறை பாதிக்கப்படும் ஆபத்து ஏற்பட்டிருப்பதாக எச்சரிக்கப்பட்டுள்ளது.

இந்த நூற்றாண்டில் முன் எப்போதும் ஏற்பட்டிருக்காத வகையில் ''எல் நைனோ'' காலநிலை இம்முறை மோசமான பாதிப்புக்களை உலகெங்கும் ஏற்படுத்தியுள்ளது'

இந்தக் காலநிலை அனர்த்தத்தின் விளைவாக அதிகரித்து வரும் வெப்பம் தேயிலைக் கன்றுகளைப் பாதிக்கும் ஆபத்து ஏற்படலாம் என்று நிபுணர்கள் கருதுகின்றனர்.

இதனை முன்கூட்டியே எதிர்கொண்டு மாற்று நடவடிக்கைகளை எடுப்பதற்கான வழிமுறைகளை இலங்கையின் தேயிலைத் தோட்டத் துறையினருக்கு வழங்க ''தேயிலை ஆராய்ச்சி நிலையம்'' தயாராகி வருகிறது.

1981—82 மற்றும் 1991—92ஆம் ஆண்டு காலப்பகுதியில் 'எல்–நைனோ'வின் விளைவாக இலங்கையின் தேயிலை உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியைவிட இம்முறை இழப்பு அதிகமாக இருக்கும் என்று தேயிலை ஆராய்ச்சி நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

### வரட்சி நீடிக்கும்

இதேவேளை—

நாட்டில் தற்போது நிலவும் வரட்சியான காலநிலை மேலும் இரண்டு அல்லது மூன்று மாத காலம் நீடிக்கும் என்று காலநிலை அவதான நிலைய அதிகாரி ஜெயதிலக பண்டார தெரிவித்துள்ளார்.

இக் காலத்தில் மழை பெய்தாலும் கடந்த காலங்களைப் போன்று அது போதுமானதாக இருக்கமாட்டாது.

மார்ச் இறுதியில் ஆரம்பமாகும் இடைக் காலப் பருவ நிலையினால் நாட்டின் மத்திய பகுதிக்கு— குறிப்பாக நுவரெலியா பகுதிக்கு மழை கிடைப்பது வழக்கம் ஆனால் இம்முறை இந்த மழை வீழ்ச்சியை எதிர்பார்க்க முடியாது— என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## உலக அரங்கில்

### மீண்டும் தெரிவு

ஹெவானா, பெப். 27

கியூப ஜனாதிபதி பிடல் காஸ்ட்ரோ அடுத்த ஐந்து ஆண்டு காலத்துக்கு ஜனாதிபதியாக மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (ஐ)

## சிட்கப்பூரில் எய்ட்ஸ் தீவிரம்

சிங்கப்பூர், பெப். 27

பெரும் எண்ணிக்கையான சிங்கப்பூர் வாசிகள் கடந்த ஆண்டு எச்.ஐ.வி. வைரசினால் !பாதிக்கப்பட்டுள்ளனர் என சிங்கப்பூர் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

### நீதிபதி...

(மூன்றாம் பக்கத் தொடர்)

டது.

இந்த நிலையில் ஜெயின் கமிஷன் பதவிக் காலம் மேலும் நீடிக்கப்படுமாஎன்ற சந்தேகம் ஏற்பட்டது. பதவிக் காலத்தை நீடிப்பதில் உள்துறை அமைச்சருக்கு விருப்பமில்லை என்றும் கூறப்பட்டது.

எனினும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு தற்போது பதவியில் இல்லாத நிலையில், ஜெயின் கமிஷனுக்குப் பதவி நீடிப்பு இல்லை என்ற முடிவை இடைக்கால அரசான குஜ்ரால் அரசு எடுத்தால், அது சர்ச்சையைக் கிளப்புமென்று பிரதமர் குஜ்ரால் கருதுகிறார். எனவே தற்போதைக்கு இரு மாதங்களுக்கு மட்டும் நீடிப்பு அளிப்பது என்ற முடிவுக்கு மத்திய அரசு வந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இதற்கிடையில், இரு மாதங்களுக்குப் பதவி நீடிப்பு அளிக்கப்பட்டாலும், அதற்குள் இறுதி அறிக்கையைத் தயாரிக்க முடியுமா என்ற சந்தேகம் கமிஷனுக்கு உள்ளது. இடைக்கால அறிக்கையைத் தயாரிக்கவே கிட்டத்தட்ட நான்கு மாதங்கள் ஆனது.

ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்ட பின்னணி குறித்து மட்டுமே இடைக்கால அறிக்கையில் விவாதிக்கப்பட்டுள்ளது. முக்கிய விடயமான சதித் திட்டம் குறித்து. தன்னிடமுள்ள ஆயிரக்கணக்கான ஆவணங்கள், சாட்சியங்கள், வாக்குமூலங்கள் ஆகியவற்றைப் பரிசீலித்து முடிவெடுக்க மேலும் அவகாசம் தேவைப்படும் என்று கமிஷன் வட்டாரங்கள் கருதுகின்றன. (ஐ–10)

## "குளோனிங்" மூலம் முதல் கன்றுக்குட்டி

### விஞ்ஞானிகள் சாதனை

எடின் பெரோ, பெப். 27

'குளோனிங்' எனப்படும் மரபு அணுச் சிகிச்சை முறை மூலம் அமெரிக்க விஞ்ஞானிகள் மாட்டுக் கன்று ஒன்றை உருவாக்கியுள்ளனர்.

இக் கன்றுக் குட்டி கடந்த 16 ஆம் திகதி பிறந்துள்ளது. அதற்கு முன்னாள் அமெரிக்க அதிபர் ஜேபர்சனின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் மேரிலான்ட் கால்நடை மருத்துவக் கல்லூரியில் இக்கன்று பிறந்துள்ளது என்ற தகவலை கடந்த திங்களன்று விஞ்ஞானிகள் அறிவித்தனர்.

ஸ்கொட்லாந்தின் பி. பி. எல் நிறுவனமும், அதன் துணை நிறுவனமும் இணைந்து இக்கன்றுக் குட்டியைப் படிப்படியாக உருவாக்கின. இக்கன்று ஆரோக்கியமாக உள்ளது. அதன் நிறை 44 கிலோ கிராம்.

கடந்த ஓராண்டுக்கு முன்பு முதலாவது செம்மறி ஆட்டை பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் 'குளோனிங்' முறை மூலம் உருவாக்கிச் சாதனை புரிந்தது குறிப்பிடத்தக்கது.

மரபு அணுக்கள் மூலம் விலங்குகளை நகல் எடுப்பது மருத்துவ ஆராய்ச்சிக்காக அனுமதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இம் முறை மூலம் மனிதர்களை நகல் எடுக்கும் ஆராய்ச்சியில் ஈடுபடுவதை அமெரிக்காவும், ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் தடை செய்துள்ளன, (ஐ)

## இலக்கிய நூல்களுக்கான பரிசுத் திட்டம் - 1997

வடக்குக் கிழக்கு மாகாண எழுத்தாளர்களிடமிருந்து இலக்கிய நூல்களுக்கான பரிசுத் திட்டத்திற்கு நூல்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. பின்வரும் துறைகளில் போட்டிகள் இடம்பெறும்.

| | |
|---|---|
| 1. நாவல் | 5. சிறுவர் இலக்கியம் |
| 2. சிறுகதை | 6. சமய இலக்கியம் |
| 3. கவிதை | 7. ஆய்வு இலக்கியம் |
| 4. நாடகம் | 8. பல்துறை இலக்கியம் |

அ) அரசியல், சமூக வரலாறு வாழ்வியல் சம்பந்தமான நூல்கள்.

ஆ) விஞ்ஞான பொருளாதார மொழியியல் சம்பந்தமானவை.

**விதிகள்:**

1. ஒரு எழுத்தாளர் எல்லாப் போட்டிகளிலும் கலந்து கொள்ளலாம்.
2. நூல்கள் 1997 ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் டிசம்பர் 31ஆம் திகதி வரை அச்சில் வெளிவந்தவையாக இருக்க வேண்டும்.
3. வேறு போட்டிகளில் ஏற்கனவே பரிசுபெற்றவையாக இருத்தல் கூடாது.
4. போட்டிகளில் நடுவர்களின் திர்ப்பே இறுதியானதாகும்.

நூற்பிரதிகளை அனுப்ப விரும்புவோர் ஒவ்வொன்றிலும் மும்மூன்று (03) பிரதிகள் அனுப்ப வேண்டும். எதிர்வரும் ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் திரு. எஸ். எதிர்மன்னசிங்கம், உதவிப் பணிப்பாளர், பண்பாட்டலுவல்கள், கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு, திருகோணமலை என்று முகவரியிட்டு பதிவஞ்சலில் அனுப்ப வேண்டும்.

சுந்தரம் டிவகலாலா
செயலாளர்,
**கல்வி பண்பாட்டலுவல்கள்
விளையாட்டுத்துறை அமைச்சு,
திருகோணமலை.**

(சி–2997) 1998–02–17.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூட்டம்

பளை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.00மணிக்கு கல்லூரி மண்டபத்தில் அதிபர் அ. கைலாய பிள்ளை தலைமையில் நடைபெறும். (இ–117)

## சமய சந்நிதியில்

கொழும்புத்துறை, பெப். 27

சங்கானை நிகரை அருள் மிகு ஸ்ரீ ஞானவைரவர் ஆலயத்தின் வருடாந்த அலங்காரத் திருவிழா கடந்த புதன் கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 11 ஆம் திகதி புதன்கிழமை மாசி மகத் தினத்தன்று விசேட சங்காபிஷேகத்துடன் இந்த உற்சவம் நிறைவுபெறும். (ஐ-30)

★ ★ ★

கொக்குவில் திருவருள் மிகு ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலய மாசி மக இலட்சார்ச்சனை எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் 11 ஆம் திகதி புதன் கிழமை வரை நடைபெறவுள்ளது.

தினமும் பிற்பகல் 2-30 மணிக்கு ஸ்நபன அபிஷேகமும் தொடர்ந்து மூல மூர்த்திக்கு விஷேட பூசை, நியாசம், தீபாராதனை, நவசக்தி அர்ச்சனை, ஹோமம் முதலிய கிரியைகளும் இடம் பெறும்.

இலட்சார்ச்சனைப் பூர்த்தி நாளன்று நவோத்தர சகஸ்ர சங்காபிஷேகமும் தொடர்ந்து இலட்சார்ச்சனைப் பூர்த்தியும் திருவூஞ்சல் நிகழ்ச்சியும் நடைபெறும். இறுதியில் அம்பாள் வெளிவீதி உலா வருதலும் இடம்பெறும். (ஐ-7)

★ ★ ★

துன்னாலை கோவிற்கடவைப் பிள்ளையார் கோயிலின் தீர்த்தோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும். (ஐ–173)

★ ★ ★

தென் புலோலி ஸ்ரீமுதலி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவம் நாளை மறுதினம் 1 ஆம் திகதி ஆரம்பமாகின்றது.

8 ஆம் திகதி வேட்டைத் திருவிழா, 11 ஆம் திகதி மாசி மகத் தீர்த்தம் ஆகியவற்றுடன் உற்சவம் நிறைவுறும்.

இதே வேளை, கடந்த பல வருடகாலமாக இந்த ஆலயத்தில் இடம்பெற்று வந்த ஒருநேரப் பூசை, உற்சவ காலத்திலிருந்து இரு நேரப் பூசையாக அதிகரிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (இ–109)

## வடமாகாண நீதிமன்ற எழுதுநர் சேவை:

# நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் விவரம்

யாழ்ப்பாணம், பெப். 27

வடமாகாண நீதிமன்றங்களில் எழுதுநர் சேவைக்கு நியமனம் செய்வதற்கான நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டுள்ளவர்களுடைய பெயர் விவரங்கள் கீழேதரப் பட்டுள்ளன.

இந்த நேர்முகத் தேர்வு மார்ச் 10 ஆம் திகதி யாழ். மாவட்ட நீதிமன்றில் நடைபெறும்.

எஸ். சர்வேஸ்வரன்—கல்வயல், சாவகச்சேரி.

க. வாசுகி — மட்டுவில், வடக்கு.

எஸ். சிறிகரன் — கந்தர் மடம்.

செல்வி ஜீ. இராஜேஸ்வரன் — கொக்குவில்.

கே. பாமா — கரவெட்டி மத்தி.

எஸ். மாலதி — யாழ்ப்பாணம்.

ஏ. ஜானகி — கரவெட்டி மத்தி.

ஏ. சிறிதேவி — புலோலி, கிழக்கு.

சி. சிவகுமார்—கொழும்பு – 14

எம். மகிந்தன்—கல்வயல், சாவகச்சேரி.

ஏ. லதா — நல்லூர்.

வி. வி. பாகன் — யாழ்ப்பாணம்.

ஜே. இவலின் துஜியா — திருநெல்வேலி, வடக்கு.

வி. சிறிபாரதி — வரணி வடக்கு.

டி. சர்மிளா — கொக்குவில் மேற்கு.

எஸ். இளம்பிறை — அல்வாய் வடக்கு.

இ. தேவேந்திரன் — கரவெட்டி, கிழக்கு.

செல்வி. எஸ். துரைராசா — புலோலி கிழக்கு.

ஆர். கரிகாலன் — கரணவாய், கரவெட்டி.

வி. பானுமதி — நீர்வேலி, வடக்கு.

ஏ. குலகீரன் — யாழ்ப்பாணம்.

கே. எஸ். ஜீனேந்திரகுமார் — இருபாலை.

வி. ரம்லாதேவி — திருநெல்வேலி.

செல்வி. பி. ரமணன் — யாழ்ப்பாணம்.

கே. செந்தில்குமார் — பண்ணாகம், சுழிபுரம்.

பி. டிலானி — கொக்குவில் கிழக்கு.

பி. சிந்துஜா — புங்கங்குளம், யாழ்ப்பாணம்.

செல்வி. பி. ரகுநாதன் — கரணவாய் கிழக்கு, கரவெட்டி.

பி. சுனித்ரா — நெல்லியடி, கரவெட்டி.

ஆர். நகுலன்—கரவெட்டி, மத்தி.

வி. அமுதான்ஜலி — அத்தியடி, பருத்தித்துறை.

வி. யுகசாந்தா — 8 ஆம் பிரிவு புதுக்குடியிருப்பு.

சி. மனோகரி — கெப்புள்வு, முள்ளியவளை.

கே. சுகுமார் — குமுழமுனை, முள்ளியவளை.

எஸ். ரோகினி — யோகபுரம், முல்லைத்தீவு.

ஆர். அருள்நேசன்— காமடுக்குளம், வவுனியா.

கே. ஆறுமுகம்— 145, மன்னார் வீதி, வவுனியா.

வி. ஏ. விஜயகுமாரி — தம்பகாமம், பளை.

ஆர். கோகுலராகவன் — புலோப்பளைமேற்கு, பளை.

செல்வி எஸ். செல்லத்துரை— யாழ்ப்பாணம்.

செல்வி எஸ். கஜனி — ஆனந்தபுரம், கிளிநொச்சி.

எஸ். குணாராணி — புலோப்பளைமேற்கு, பளை.

ரி. தர்மேந்திரன் — சிவநகர், ஆனந்தபுரம், புதுக்குடியிருப்பு.

ஆர். புவனேஸ்வரி — அம்பாள்புரம், வவுனிக்குளம்.

எஸ். செந்தூரன் — அல்வாய் மேற்கு. (இ-5)

## விளையாட்டு நிகழ்வு

வலிகாமம்தெற்கு, பெப். 27

வலிகாமம் தெற்கு சனசமூக நிலையங்களின் சமாசத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்டு வரும் விளையாட்டு போட்டிகளின் கீழ் சுன்னாகம் மாப்பாணர் விளையாட்டரங்கில் நாளை சனிக்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு உதைபந்தாட்ட போட்டி நடைபெறும். (ஐ–152)

## மீன் பிடிக்க அனுமதி

வடமராட்சி, பெப். 27

வடமராட்சி வடக்கு கரையோரப் பகுதிகளில் இன்பருட்டி, சுப்பர்மடம் பகுதிகள் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் நேற்று முதல் மீன் பிடிக்க அனுமதி வழங்கப்பட்டது.

தாக்குதலுக்குள்ளான கப்பலை மீட்கும் வரை இன்பருட்டி, சுப்பர்மடம் மீனவர்கள் மீன் பிடிக்க அனுமதிக்கப்படமாட்டார்கள் எனக் கூறப்படுகிறது. (இ-109–173)

## நிரந்தர நியமனம்

யாழ்ப்பாணம், பெப். 27

கடந்த 20 வருடங்களாக வேலணைப் பிரதேச சபையின் புங்குடுதீவு உபஅலுவலகத்தின் கீழ் இயங்கி வந்த பாலர் பாடசாலையின் ஆசிரியையாகக் கடமையாற்றி வந்த திருமதி தங்கராசா கமலராதேவிக்கு வடக்குக் கிழக்கு மாகாணசபையினால் நிரந்தர நியமனம் வழங்கப் பட்டுள்ளது. (ஐ-5)

# ஈ. பி. டி. பி. ஆதரவாளர் தாக்கப்பட்டார்!

## பருத்தித்துறையில் சம்பவம்

யாழ்ப்பாணம், பெப். 27

கடந்த 24 ஆம் திகதி செவ்வாய் இரவு எட்டு மணியளவில் பருத்தித்துறை பஸ் நிலையத்துக்கு முன்பாகவுள்ள ஒரு தேநீர்ச்சாலைப் பகுதியில் தமது கட்சியின் ஆதரவாளர் ஒருவர், ஒரு குழுவினரால் கழுத்து நெரித்து பலமாகத் தாக்கப்பட்டுள்ளார் என யாழ். ஈ. பி. டி. பி. கட்சி அலுவலக வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

பருத்தித்துறையைச் சேர்ந்த எஸ். உதயச்சந்திரன் (36 வயது) என்பவரே இவ்வாறு பலமாகத் தாக்கப்பட்டு முன்பக்க பற்கள் உடைந்த நிலையில் பீதியடைந்த மனநிலையோடு மந்திகை ஆதாரவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக ஈ. பி. டி. பி. கட்சியின் யாழ். அலுவலகம நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பு ஒன்றில் புளொட் அமைப்பின் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (உ-7)

# 20 பல்கலைக்கழக மாணவர் மீது விசாரணை

## கல்வி ஒழுங்கை மீறினராம்

கொழும்பு, பெப். 27

பல்கலைக் கழகங்களின் ஒன்றுக்கு மேற்பட்ட பீடங்களில் தமது பெயர்களைப் பதிவுசெய்தது மாத்திரமன்றிப் பாடநெறிகளிலும் பங்குபற்றியதாகக் கூறப்படும் 20 பல்கலைக்கழக மாணவர்கள் தொடர்பாகப் பல்கலைக்கழக மானியக்குழு விசாரணைகளை நடத்தி வருகிறது.

ஒன்றுக்கு மேற்பட்ட பீடங்களில் (அல்லது பிரிவுகளில்) பெயர்களைப் பதிவு செய்து பாடநெறிகளைப் பின்பற்றுகிறார்கள் எனப் பல முறைப்பாடுகள் கல்வி அமைச்சுக்குக் கிடைத்துள்ளதாகத் தெரியவருகிறது.

பல்கலைக் கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களும் பல்கலைக் கழகங்களில் தமது பெயரைப் பதிவு செய்துகொண்ட மாணவர்களும் வேறு நிறுவனங்களில் தமது பெயரைப் பதிவு செய்து பாடநெறியைப் பின்பற்றுவது தடை செய்யப்பட்டுள்ளபோதிலும் இவர்கள் இரு பிரிவுகளில் தமது பெயர்களைப் பதிவு செய்து கல்வி கற்று வருவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

எவ்வாறாயினும்இரு பீடங்களில் அல்லது பிரிவுகளில் தமது பெயரைப் பதிவு செய்துள்ளனர் என விசாரணைகளின்போது நிரூபிக்கப்படுமாயின் அவ்வாறான மாணவர் அந்த இரு பீடங்களில் இருந்தும் அல்லது பிரிவுகளில் இருந்தும் வெளியேற்றப்படுவார்கள் என உயர் கல்வி அமைச்சுப் பேச்சாளர் தெரிவித்தார். (இ-10)


இந்துக் குருமார் ஒன்றியத்தின்
தென்மராட்சிக் கிளைக் கூட்டம்

இந்துக்குருமார் ஒன்றியத்தின் கிளைக் கூட்டம் நாளை 23 - 02 - 98 சனிக்கிழமை பிற்பகல் 1·00 மணிக்கு தலைவரின் இல்லத்தில் நடைபெறும். அங்கத்தவர்கள் சமுகம் தரவும். அன்று ஒன்றியத்தால் வழங்கப்படும் விசேட அடையாள அட்டையையும் பெற்றுக் கொள்ளலாம்.

தலைவர்,
இந்துமத குருமார் ஒன்றியம்,
தென்மராட்சிக்கிளை.
(சி/2978)

NEW SCIENCE COLLEGE
கன்னாதிட்டி றோட், யாழ்ப்பாணம்.
Pure/ Applied Maths
2000 A/L, '99 A/L
ஆரம்பம்: 28–02–1998, சனிக்கிழமை
Sat. Sun. 1-00 — 3-00, 3-00 — 5-00
Mon. Wed. Fri. 4-30p.m 98 A/L வகுப்புகள் நடைபெறுகின்றன.
★ பிரிவுகளுக்கான பாடநேர விவரம் நிறுவனத்தில் அறியவும்.
(53681)

விக்னா
கல்வி நிறுவனம்
அளவையியல்
திரு. சயந்தன்
★ A/L 2000
SAT – SUN → 8.00 – 9.00
★ A/L 99
SAT - SUN → 9.00 - 10.00
★ A/L 98
SAT - SUN → 3.00 - 4.00
(53679)

BOSCO
INSTITUTE
கலை, வர்த்தகம்
A/L
96- பழைய ) பாடத்
97- புதிய ) திட்டம்
சகல பாடங்களுக்குமான
மீட்டல் வகுப்புக்கள்
ஆரம்பம்: 28–02–98
காலை 8.00 மணி
(53696)

வடமராட்சி
லயன்ஸ் கழகம்
இலவச கண் பரிசோதனை

01 - 03 - 98 இல் நடைபெறவுள்ள கண் பரிசோதனைக்கு கீழ்க் குறிப்பிடப்படும் பதிவுகளுக்கு உரியவர்கள் மட்டுமே உட்படுத்தப்படுவார்கள்.

1) புலோலி நாவலர் புத்தகசாலையில் பதிவு செய்த முதல் 100 பேர்
2) நெல்லியடி பல்பொருள் அங்காடியில் பதிவு செய்த முதல் 100 பேர்
3) இதற்கு முன்னர் எமது கழகத்துடன் பதிவு செய்து கொண்டவர்கள்

எனவே மேற் குறிப்பிட்டவர்களை 01 - 03 - 98 காலை 8·00 மணிக்கு எமது கழக செயலகத்தில் சமுகமளிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

ஆ. சிவசுவாமி
தலைவர்
(53693)

ஜனசக்தி சனசமூக நிலையம்
மயிலணி வடக்கு, சுன்னாகம்.
மேற்படி நிலையத்தால் 25 — 02 — 1998 அன்று நடத்தப்பட்ட
அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு

பரிசு பெறும் இலக்கங்கள்:
1 ஆம் பரிசு இல. 810
2 ஆம் பரிசு இல. 348
3 ஆம் பரிசு இல. 1494

— நிலையத்தினர்
(53685)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவராத்திரி...

(முதலாம் பக்கத் தொடர்)

சொந்த வாகனங்களில் வந்தோர் மட்டும் ஆலயம்வரை தமது வாகனங்களில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகளும் சமய நிகழ்ச்சிகள், சொற்பொழிவுகள் என்பனவும் இடம்பெற்றன.

பக்தர்கள் கடல், கேணி ஆகியவற்றில் இறங்கி நீராடுவதற்கும் அனுமதிக்கப்பட்டனர்.

ஆலயத்தின் பெரும் பகுதிகள் சேதமடைந்திருந்த நிலையிலும் வழிபாடுகள் அனைத்தும் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டன.

நேற்றுக் காலை 7 மணி முதல் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது. சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் இரவு தங்கி நின்று பூஜை வழிபாடுகளில் கலந்து கொண்டனர்.

நேற்றும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் ஆலயத்துக்குச் சென்றதைக் காணக் கூடியதாக இருந்தது. ஆலய வழிபாடு முடித்த பக்தர்கள் சொந்த இடங்களுக்குத் திரும்புவதற்கும் வாகன வசதிகள் செய்யப்பட்டிருந்தன.

கீரிமலை முத்துமாரி அம்மன் ஆலயத்தின் தேரும் சேதமடைந்து உருக்குலைந்த நிலையிலேயே காணப்படுகின்றது. (இ-9)

## கிளாலித் தளம்...

(முதலாம் பக்கத் தொடர்)

இரு கப்பல்கள் பருத்தித்துறைக் கடற்பரப்பில் வைத்து அழிக்கப்பட்டது தெரிந்ததே.

அதேசமயம் விடுதலைப் புலிகளின் சிறுத்தைப் படையினரின கடல் அணியே கிளாலி கடற்படைத் தளத்தின் இறங்குதுறை மீது தாக்குதல் நடத்தியதாகவும் —

இந்த தாக்குதலின் போது கடற்படையினரின் 'வோட்டர்ஜெட்' படகு ஒன்று அழிக்கப்பட்டதாகவும் —

இருவேக விசைப்படகுகள் சேதமடைந்ததாகவும்— 'புலிகளின் குரல்'வானொலி நேற்று இரவு தெரிவித்தது.

கடற்படையினருக்கான களஞ்சியமும் இந்தத் தாக்குதலின் போது எரித்து அழிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-7-9)


நிரு ரியூசன் சென்ரர்

கோண்டாவில்.

**A/L 97, 98**

பௌதீகவியல்

PAPER CLASS

T. சம்பந்தன்

ஆரம்பம்:

**02–03–98**

(5.00 மணி)

(49972)



**BITSMANS**

கல்வி நிறுவனம்

மானிப்பாய்.

மீண்டும்

ஆசிரியர் M. A. ஹரி

SPOKEN ENGLISH WITH GRAMMAR

ஆரம்பம்:

**03 - 03 - 98**

செவ்வாய் காலை 8-00 மணி

அனுமதிக்கு முந்துங்கள்

(49974)


## அன்றைய நிலை...

(முதலாம் பக்கத் தொடர்)

தயாராக இருந்ததாக ரைம் சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

இந்த விவகாரம் தற்பொழுது அரசியல் சர்ச்சையை உருவாக்கி வருகிறது.

தமது ரைம் சஞ்சிகை பேட்டி குறித்து செய்தியாளர்களிடம் ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது:

பொது மக்கள் ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வந்த முதல் எட்டு மாத காலத்தில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்திற்கும் இடையில் தாக்குதல் நடவடிக்கைகள் எதுவும் இடம்பெறவில்லை. இக்கால கட்டத்திலேயே வடபகுதி நிர்வாகத்தைப் பிரபாகரனிடம் கையளிப்பது தொடர்பான கருத்து வெளியிடப்பட்டது.

ஆனால், அப்போது நான் கூறிய விடயம் தொடர்பாக தற்போது பல்வேறு வகையான அபிப்பிராயங்களும், கருத்துக்களும் நிலவுகின்றன.

அரசின் தீர்வுத்திட்ட நகல் குறித்து புலிகள் கலந்துரையாடல்களை நடத்தலாம் என அன்று நான் தெரிவித்திருந்தேன்.

விடுதலைப் புலிகளுடன் எமது அரசாங்கம் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்திய 94ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்திலேயே தீர்வுத்திட்ட நகல் தயாராக இருந்தது.

தீர்வுத் திட்டத்தை ஆராய்வதற்கும்—

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கும்—

இராணுவத் தாக்குதல்களை நடத்தி முடிப்பதற்கும்—

ஆயுதங்களை ஒப்படைப்பதற்கும்—

நாட்டின் மீது யுத்தத்தை அமுல் செய்துள்ள ஓர் அமைப்பு தயாராகவுள்ளதா? என்பதை அறிந்து கொள்ளும் பொருட்டே இத்தகைய கருத்தை அன்று வெளியிட்டிருந்தேன்.

என்னுடைய கருத்துக்களுக்கு பேராசிரியர் ஜீ.எல். பீரிஸும் ஆதரவாக இருந்தார்.

தனி மாநிலம் கோரிப் போராட்டம் நிகழ்த்தி வரும் விடுதலைப் புலிகள், ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் இருந்த போது மறைமுகமாக அரசியல் நிர்வாகத்தை மேற்கொண்டிருந்தனர்.

இத்தகைய சூழ்நிலையிலே விடுதலைப் புலிகளுக்குத் திட்டவட்டமான முறையில் சில விவரங்களை அறிவிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டதை அடுத்து ஐந்து தொடக்கம் பத்து வருடங்களுக்குஇத்தகைய நிர்வாகப் பொறுப்பை வழங்க முடியும் என அன்று எமது அரசாங்கம் தெரிவித்திருந்தது.

வடபகுதியை விடுதலைப் புலிகள் நிர்வகிக்க வேண்டுமானால் அந்த அமைப்பு ஜனநாயகக் கட்சியாக மாறுவதோடு ஆயுதங்களையும் ஒப்படைத்தல் வேண்டும். அத்தோடு வடபகுதியில் செயற்படவிருக்கும் ஜனநாயக வழிக்கு வந்த ஏனைய தமிழ்க்கட்சிகளையும் அரசியல் நீரோட்டத்துக்குப் பயன்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

இதன் மூலமே அங்கு ஜனநாயக ரீதியிலான தேர்தல்களை நடத்த முடியும் என எமது அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்திய போது தெரிவித்திருந்தது.

இத்தகைய விடயங்கள் ஒரு நாட்டுக்குப் புதியவை அல்ல. பிலிப்பீன்ஸைச் சேர்ந்த மோரோ கிளர்ச்சி வாதிகளும், பங்களாதேஷைச் சேர்ந்த சாந்தி பாஹினி கிளர்ச்சிவாதிகளும் தமது ஆயுத ரீதியான நடவடிக்கைகளை கைவிட்டு இன்று ஜனநாயக வழிக்குத் திரும்பி உள்ளனர்.

ஆனால் இன்றைய நிலையைப் புரிந்து கொள்ளாத ஐக்கிய தேசியக் கட்சியினர் நான் ரைம் சஞ்சிகைக்குக் கொடுத்த பேட்டியைப்பற்றி வீண் வதந்திகளைப் பரப்பி வருகின்றனர்.

1986 ஆம் ஆண்டு பெங்களூரில் நடைபெற்ற சார்க் மாநாட்டின் போது, அப்போதைய இலங்கை ஜனாதிபதிஜே.ஆர்.ஜெயவர்த்தனா தம்மைச் சந்தித்துப் பேசிய ராஜீவ்காந்தியிடம் விடுதலைப் புலிகள் யுத்தத்தைக் கைவிடுவார்களானால்—

தேர்தல் எதனையும் நடத்தாமல்—

வடக்கு,கிழக்கு மாகாணத்துக்கு பிரபாகரனை முதல அமைச்சராகநியமிக்கத் தாம் உடன்படுவதாகத் தெரிவித்திருந்தார்.

இதே வேளை முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா எதுவித நிபந்தனையுமின்றி விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்களையும், பண உதவிகளையும் வழங்கியிருந்தார்.

ஆனால் இத்தகைய நடவடிக்கைகளுக்கு எல்லாம் அப்பாற்பட்ட நிலையிலேயே நான் செயற்படுகின்றேன்.

எப்பொழுதும் பொறுப்பற்ற நிலையில் நான் செயற்படவில்லை. செயற்படவும் மாட்டேன். அதேவேளை எனது அரசாங்கமும் அவ்வாறு நடந்து கொள்ளவும் மாட்டாது.

சமாதானத்தை மீண்டும் ஏற்படுத்தவென விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைகளுக்குத் தயாராக இருந்த போதே இத்தகைய நிர்வாகப் பொறுப்புக் கையளிப்புப் பற்றி எமது அரசாங்கம் தெரிவித்திருந்தது.

சமாதானத்தை ஏற்படுத்த விரும்பாத ஐக்கிய தேசியக் கட்சியினர் இன்று தப்பான அபிப்பிராயங்களை வெளியிட்டு வருகின்றனர்.

இப்படி ஜனாதிபதி கூறினார். (இ–217)

## பிரபாகரன் உட்பட எட்டுப் பேரை நீதிமன்றில் ஆஜராக உத்தரவு

கொழும்பு, பெப். 27

1996 ஆம் ஆண்டு இடம்பெற்ற மத்திய வங்கி மீதான குண்டுத் தாக்குதல்களுக்குக் குற்றவாளிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே. பிரபாகரன் மற்றும் உளவுப் பிரிவின் தலைவர் பொட்டு அம்மான் உட்பட 8 பேரும் மே மாதம் 18 ஆம் திகதி காலை 9 மணிக்கு நீதிமன்றில் ஆஜராக வேண்டுமென்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஏ.எல். ராமச்சந்திரா நேற்று உத்தரவிட்டார்.

விசாரணைகளின் ஆரம்பத்தில் பொலீஸாரின் உளவுப் பிரிவைச் சேர்ந்த சார்ஜன். பாலசூரிய சாட்சியம் அளிக்கையில், பிரபாகரன் உள்ளிட்ட 8 குற்றவாளிகளைப் பிடிக்கும்படி இதற்கு முன்னர் பல தடவைகள் பிடிவிறாந்துகள் பிறப்பிக்கப்பட்டன என்றும் —

ஆனால் இந்தச் சந்தேக நபர்கள் வடபகுதியில் பாதுகாப்புப் படையினரால் விடுவிக்கப்பட்ட பகுதியில் வசிக்கவில்லை என்றும் —

இதுவரை விடுவிக்கப்படாத பகுதியிலேயே வசித்து வருவதாகத் தமக்கு தகவல் கிடைத்திருப்பதாகவும் தெரிவித்தார்.

ஏற்கனவே பிறப்பிக்கப்பட்ட பிடிவிறாந்துகளை சந்தேக நபர்களிடம் கையளிக்க முடியாதது போலவே இம்முறையும் பிடிவிறாந்துகளை கையளிக்க முடியாது எனவும் பொலீஸார் சார்பில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து பிடிவிறாந்துகளை பத்திரிகைகளில் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பிரசுரிக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (இ-7-164-10)

## இனப்பிரச்சினைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்)

மாநாட்டில் செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளுக்கு ஜேர்மன் எம். பிக்கள் பதில் அளித்தனர்.

ஜேர்மனியில்பல்வேறு தமிழ் அமைப்புக்கள் இயங்குகின்றன. அந்த அமைப்புகள் ஜேர்மன் சட்டத்தை மீறாத வரை நாம் அவை விடயத்தில் தலையிட போவதில்லை என்று வோல்ப் காங்குரோஸ் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் இயக்கம் பயங்கரவாத இயக்கமா? என்று கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு அவர் பதில் அளிக்கையில் தம்மால் இதற்குப் பதில் கூறமுடியாதிருப்பதாக அவர் கூறினார்.

இந்தச் செய்தியாளர் மாநாட்டுக்கு முன்னர் ஜேர்மன் எம்.பிக்கள் குழு தமிழ் கட்சிகளைச் சந்தித்தது.

ஈ.பி.டி.பி. புளொட், தமிழர் விடுதலை முன்னணி ஆகியவை இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டன.

ஈ.பி.டி.பி. சார்பாக அதன் செயலாளர் நாயகமும் எம். பியுமான டக்ளஸ் தேவானந்தா, டாக்டர் விக்னேஸ்வரன், தவராசா புளொட் சார்பில் அதன் தலைவரும் எம்.பியுமான த. சித்தார்த்தன், கூட்டணி சார்பாக அதன் தலைவர் எம். சிவசிதம்பரம் மற்றும் ஆர். சம்பந்தன் ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர். (இ-21-9)

## நிதி,பொருள்...

(முதலாம் பக்கத் தொடர்)

ஒன்றில் கேட்டுள்ளனர்.

அந்த அமைப்பின் யாழ். மாவட்ட அமைப்பாளர் எஸ். கிருபைராஜா விடுத்த அச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யாழ். குடாநாட்டில் சில அரசியல் கட்சிகள் நிதி வசூல் செய்து வருவதாக அண்மைக் காலமாக பாதுகாப்பு அதிகாரிகளாலும் பத்திரிகைகள் மூலமும் செய்திகள் வெளியாகி வருகின்றன.

எமது அமைப்பைப் பொறுத்த வரை 1997 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் எமது செயற்பாடுகளை யாழ். குடாநாட்டில் ஆரம்பித்தோம். அன்று முதல் இன்று வரை வர்த்தகர்களிடமோ பொதுமக்களிடமோ பணமோ அல்லது பொருள்களோ சேகரிக்கவில்லை என்பதை உறுதியாகவும் தெளிவாகவும் தெரியப்படுத்துகின்றோம்.

யுத்த அழிவுகளுக்குள்ளான யாழ். குடாநாட்டைப் புனரமைக்கும் பணியில் நாம் தீவிரமாக செயற்பட்டு வருகின்றோம்.

பொது'அமைப்புகள்,பொது மக்களுடனான சந்திப்புகள், கலந்துரையாடல்களின் போதும் நிதி, பொருள்களை சேகரிப்பதில்லை என்ற எமது நிலைப்பாட்டைச் சில மாதங்களின் முன்னரே தெரியப்படுத்தியதோடு எமது கழகத்தின் பெயரில் எவராவது இவ்வாறான செயல்களில் ஈடுபட்டால் உடன் எமது கவனத்திற்குக் கொண்டு வருமாறும் கேட்டிருந்தோம்.

சில தினங்களின் முன்னர் பாதுகாப்புத்துறை பொறுப்பு வாய்ந்த அதிகாரியின் பத்திரிகை அறிக்கையில் சில அரசியல் கட்சிகள் யாழ். நகரில் நிதி வசூலிப்பதாக வெளிவந்த செய்தி நிதி வசூலிக்காத கட்சிகளுக்கு களங்கத்தை ஏற்படுத்துவதாக அமைகிறது.

பல கட்சிகள் செயற்படுகின்றபிரதேசத்தில் சில கட்சிகள் என்பதைவிடுத்து விசாரணைகள் மூலம் தெரிய வந்ததை வெளிப்படுத்துவதே பயனுள்ளதாகும்.

இவ்வாறு அதில் குறிப்பிடப் பட்டுள்ளது. (இ-9)

## கல்யாண்சிங்...

(முதலாம் பக்கத் தொடர்)

கல்யாண்சிங் அரசுக்கு அளித்து வந்த ஆதரவை இரண்டு கூட்டணிக் கட்சிகள் கடந்த 21 ஆம் திகதி வாபஸ் பெற்றதை அடுத்து அந்த அரசு சட்ட மன்றத்தில் பெரும்பான்மைப் பலத்தை இழந்ததும் —

மாநில ஆளுநர் றொமேஸ் பண்டாரி பெரும்பான்மையை நிரூபிக்க கல்யாண்சிங்குக்கு சந்தர்ப்பம் வழங்காமல் தன்னிச்சையாக கல்யாண்சிங் அரசைக் கலைத்துவிட்டு லோகதந்திர காங்கிரஸ் தலைவர் ஜெகதாம்பிகாபாலை முதலமைச்சராக நியமித்ததும் தெரிந்தவையே.

இது தொடர்பான விடயங்களை ஆராய்ந்த அலகாபாத்உயர் நீதிமன்றம் உத்தரப் பிரதேச முதலமைச்சராக கல்யாண்சிங்கை மீண்டும் பதவியில் அமர்த்துமாறு உத்தரவைப்பிறப்பித்திருந்தது.

இதேவேளை இந்த உயர் நீதிமன்றத்தின் உத்தரவை எதிர்த்து லோகக்தந்திர காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜெகதாம்பிகாபால் மேல் நீதிமன்றில் சிறப்பு அனுமதி ஒன்று குறித்த விசாரணையை நடத்த வேண்டுமெனக் கோரி இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

சிறப்பு அனுமதி குறித்த விசாரணையை மேல் நீதிமன்றம் இன்று வெள்ளிவரை ஒத்தி வைத்தது. நேற்று வியாழன் நள்ளிரவுக்கு முன் கல்யாண்சிங் மற்றும் ஜெகதாம்பிகாபால் ஆகிய இருவரும் தத்தமது பெரும்பான்மையை நிரூபித்துக்காட்டல் வேண்டுமெனவும் கூறியிருந்தது.

நேற்று வியாழன் உத்தரப் பிரதேச சட்டப்பேரவையில் நடந்த வாக்கெடுப்பில் கல்யாண்சிங்குக்கு ஆதரவாக 225 வாக்குகளும். ஜெகதாம்பிகாபாலுக்கு ஆதரவாக 196 வாக்குகளும் கிடைத்தன.

நேற்று நடைபெற்ற வாக்கெடுப்பின்போது வன்முறைகள் ஏற்படாதிருக்க பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. (இ-9-7)

## 192 இலங்கையர்...

(முதலாம் பக்கத் தொடர்)

இவர்கள் அனைவரும் நீர்கொழும்பு நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட போது இவர்கள் அனைவரையும் எதிர் வரும் 10 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

[illegible] 192 பேரில் 61 பேர் [illegible] நோயினாலும் பலர் சரும நோயினாலும் பாதிக்கப்பட்டிருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-9-10-21)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27 – 02–98 இல்அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org